யாழ் தினக்குரல்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com
ஓசை : 020 குரல் : 262 புதன்கிழமை 01 டிசம்பர் Wednesday 01st December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/- பக்கங்கள் : 12


## கஞ்சா விற்கத் தயாராகும் அரசு

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

கஞ்சாவை ஏற்றுமதி செய்வதற்கு தேவையான சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மருத்துவ மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இரா பக்கம் 02

## தாய்க்கும் பிறந்த சிசுவிற்கும் கொரோனா

பிறந்து நான்கு நாட்களே ஆன சிசுவிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிறந்து நான்கு நாட்களே ஆன சிசுவிற்கே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் குழந்தையை பக்கம் 02

# "ஒமிக்ரான்" திரிபை எதிர்கொள்ளத் தயார்

## அதனால் மரணங்கள் ஏற்படுமா? அதற்கு தடுப்பூசி சாத்தியமா?
## உலக சுகாதார ஸ்தாபனம் எதையும் கூறவில்லை -இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

'ஒமிக்ரான்' கொரோனா திரிபு வைரஸ் பரவும் வேகம், அதற்கான நோய் அறிகுறிகள் என்ன? பி.சி.ஆர். மூலம் அதனை இனங்கண்டுகொள்ள முடியுமா? அதனால் மரணங்கள் ஏற்படுமா?அதற்கு தடுப்பூசி சாத்தியமா? என்பது தொடர்பில் இதுவரை உலக சுகாதார ஸ்தாபனம் தெளிவான விபரங்கள் எதையும் தெரிவிக்கவில்லை.

எனினும் 15 சர்வதேச நாடுகளில் பரவி வரும் இந்த வைரஸை இலங்கையில் எதிர்கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். பக்கம் 02




செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும்
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
ரூ.87,000/=
• அதிகபட்ச இரகசியதன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
செலான் தங்கக் கடன்
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)
செலான் வங்கி


## ஒமிக்ரான் பரவினால் பேரழிவே ஏற்படும்

-எச்சரிக்கிறார் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் கொவிட் மரண வீதம் அதிகரித்தே காணப்படுவதாகவும், இவ்வாறான நிலைமையில் ஒமிக்ரான் தொற்று நாட்டுக்குள் பரவினால் சுகாதார துறை பெரும் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினரான முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் பக்கம் 02

-காணி ஆக்கிரமிப்பை எதிர்த்தோருக்கு-

## கொட்டான்களுடன் மிரட்டல் படம் பிடித்தும் அச்சுறுத்தல்





மாதகல் கிழக்கு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை ஆக்கிரமிக்க நேற்று எடுக்கப்பட்ட முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்த காணி உரிமையாளர்களை படம் பிடித்தும் கொட்டான் தடிகளைக் காட்டியும் கடற்படையினர் அச்சுறுத்தினர்.

போராட்டத்தின்போது அங்கிருந்த கடற்படை சிப்பாய் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை படம் பிடித்து அச்சுறுத்தும் பக்கம் 02

## 60 இலட்சம் மக்களுக்கு ஆபத்தா?

எரிவாயு வெடிப்பில் இருந்து பாதுகாக்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

சமையல் எரிவாயு வெடிப்பில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் வலியுறுத்தினார்.


பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாட்டில் 60 இலட்சம் மக்கள் வீடுகளில் சமையல் எரிவாயுவை பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. பக்கம் 02

## ஆயுத முனையில் மக்களை மிரட்டி யாழில் காணி ஆக்கிரமிப்பு முயற்சி

-எதிர்த்து மாதகலில் நேற்றும் போராட்டம் -



கடற்படையினரை ஆயுதங்களுடன் குவித்து மக்களை மிரட்டி பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை கடற்படைக்கு ஆக்கிரமிக்கும் முயற்சி மாதகல் கிழக்கில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மாதகல் மேற்கு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை ஆக்கிரமிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டவிருந்த அளவீட்டு முயற்சி மக்கள், அரசியல்வாதிகளின் போராட்டத்தை அடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. பக்கம் 02

## வடக்கு வைத்தியசாலைகளை சுவீகரிப்பதை கைவிடுங்கள்

-வன்னி மாவட்ட எம்.பி. வினோ நோகராதலிங்கம்-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

மன்னார் ,வவுனியா,முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலைகளை மத்திய அரசு சுவீகரிக்கின்ற செயற்பாட்டை உடனடியாக கைவிட வேண்டுமென சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவிடம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. யான வினோ நோகராதலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பக்கம் 02

## எந்தச் சலுகைகளும் வேண்டாம் நீதி மட்டுமே எமக்கு வேண்டும்

-காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் கவனயீர்ப்பு-




வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நேற்று கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் - நாவலர் வீதியிலுள்ள பக்கம் 02

## நான்காவது சடலம் நேற்று யாழில் கரையொதுங்கியது

-இறந்தோர் யார்? மர்மம் தொடர்கிறது -



யாழ்ப்பாணம் கடற்கரையோர பகுதிகளில் அடுத்தடுத்து மனித சடலங்கள் கரையொதுக்கி வரும் நிலையில் இவர்கள் யார்? எங்கே, எப்போது, எவ்வாறு இறந்தார்கள்? என்பது குறித்த தகவல் இன்றி மர்மம் நீடிக்கிறது.

கடந்த 4 நாட்களில் பக்கம் 02

## பண்டிகைக் காலத்தில் நாடு மூடப்படுமா?

-இதுவரை தீர்மானம் இல்லை-

ந.ஜெயகாந்தன்

பண்டிகைக் காலத்தில் நாட்டை மூடுவதற்காக இதுவரையில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை இணை பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போது, நத்தார் கொத்தனி ஏற்படுமென பண்டிகைக் காலத்தில் நாட்டை முடக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது பதிலளித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

மீண்டும் நாட்டை மூடுவதற்காக அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. மிகவும் வெற்றிகர பக்கம் 02

## சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் ஜனாதிபதி நியமித்த குழு ஆராயும்





சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள வீடுகள் மற்றும் விற்பனை நிலையங்களில் இருந்து பதிவாகிவரும் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு மற்றும் தீப்பற்றல் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவும் அவை தொடர்பில் உடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை முன்வைப்பதற்காகவும் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சாந்த வல்பொல தலைமையிலான இந்தக் பக்கம் 02

## தடுப்பூசி கொள்வனவில் பாரிய மோசடியா?

-முஜிபுர் ரஹ்மானின் குற்றச்சாட்டால் சபையில் பெரும் அமளிதுமளி-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்



கொரோனா தடுப்பூசி கொள்வனவில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி யின் கொழும்பு மாவட்ட எம்.பி.யான முஜிபுர் ரஹ்மான் முன்வைத்த குற்றச்சாட்டையடுத்து சபையில் பக்கம் 02

# வடக்கில் வைத்தியர், தாதியர் சுகாதார உதவியாளர்கள் பற்றாக்குறை

**-உடனடியாக நிவர்த்திசெய்ய அரசிடம் கஜேந்திரகுமார் கோரிக்கை-**

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

யாழ் போதனா வைத்தியசாலையில் 657 தாதியர் தேவை உள்ள நிலையில் 573 தாதியர்களே பணியில் உள்ளனர். அவர்களிலும் 50 தாதியர்கள் தினமும் விடுமுறையில் உள்ளனர், மேலும் 73 பேர் இடமாற்றத்தில் உள்ளனர். எனவே 135 புதிய மற்றும் அவசரமான தாதியர் நியமனங்கள் தேவைப்படுவதாக தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கில் 73 வீதமான சுகாதார உதவியாளர்கள் பற்றாக்குறையும் காணப்படுவதால் இதனையும் உடனடியாக பூர்த்திசெய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

வடக்கின் மிகவும் முக்கியமான வைத்தியசாலையாக யாழ்.போதனா வைத்தியசாலை உள்ளது. வடக்கிற்கு மட்டும் அல்ல, ஏனைய பகுதிகளுக்கும் இது முக்கியமான வைத்தியசாலை. ஆனால் யாழ்.போதனா வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் மோசமான நிலையில் உள்ளன. குறிப்பாக வைத்தியசாலையின் பிரசவ விடுதிக்கான தேவையுள்ளது. தற்போதுள்ள பிரசவ விடுதி மிக மோசமான நிலைமையில் காணப்படுகின்றது. அபிவிருத்தி செய்யாது தற்காலிக ஏற்பாடுகளை மட்டுமே இதில் முன்னெடுத்து வருகின்றனர். இதனால் 50 வீதத்திற்கும் அதிகமாக கர்ப்பிணி பெண்கள் சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

மேலும் தாதியர் பற்றாக்குறை குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆலோசனை வைத்தியர்கள், மருத்துவர்கள் போன்றே தாதியர் தேவையும் அவசியம். இன்று யாழ் போதனா வைத்தியசாலையில் 657 தாதியர் தேவை இருந்தும் 573 தாதியர்களே பணியில் உள்ளனர். அவர்களிலும் 50 தாதியர்கள் எந்த நேரமும் விடுமுறையில் உள்ளனர், மேலும் 73 பேர் இடமாற்றத்தில் உள்ளனர். எனவே 135 புதிய மற்றும் அவசரமான தாதியர் நியமனங்கள் தேவைப்படுகின்றன. தேவைப்பாடு அடிப்படையில் பார்த்தாலும் கூட 1200 தாதியர்கள் தேவைப்படும், எனவே குறைந்தபட்சம் 300 தாதியர்களையேனும் அதிகரிக்க வேண்டும்.

வைத்தியர்களை பொறுத்தவரை 175 வைத்திய ஆலோசகர்களே உள்ளனர், ஆனால் 300 பேருக்கான வெற்றிடம் உள்ளது. எனவே இதனை கருத்தில் கொள்ள வேண்டும். யாழ்.போதனா வைத்தியசாலையை பொறுத்தவரையில் யுத்த காலத்தில் தன்னார்வ வைத்திய சேவையாளர்கள் பலர் இருந்த போதிலும் தற்போது வடக்கை பொறுத்தவரையில் 73 வீதமான சுகாதார உதவியாளர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. எனவே இதில் இனியும் காலதாமதம் செய்து நியமனங்களை முன்னெடுக்க வேண்டும். வடக்கை பொறுத்தவரை 117 வைத்தியசாலைகள் உள்ள போதிலும், இவற்றில் 15 வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லை. அதேபோல் 41 வைத்தியசாலைகளில் மட்டுமே தாதிய அதிகாரிகள் உள்ளனர். ஏனைய பல குறைபாடுகள் உள்ளன என்றார்.

## தடுப்பூசி கொள்வனவில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய முஜிபுர் ரஹ்மான் எம்.பி.கொரோனா தடுப்பூசி கொள்வனவில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம்சாட்டியதுடன் கொரோனா தடுப்பூசிகளின் விலைகளை விடவும் அதிக விலை கொடுத்து வாங்கியது ஏன்? ஆரோக்கியம் குறைந்த தடுப்பூசிகளுக்கு அதிக விலை கொடுத்தது ஏன்?எனவும் கேள்விக் கணைகளை தொடுத்தார்.

இதனால் வெகுண்டெழுந்த ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன மற்றும் அரச தரப்பின் பின்வரிசை எம்.பி.க்கள் கடும் கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டனர். முஜிபுர் ரஹ்மான் எம்.பி.யை உரையாற்றவிடாது இடையூறுகளை ஏற்படுத்தினர். ஒழுங்குப்பிரச்சினைகளை எழுப்பியதுடன் ஒரு கட்டத்தில் சபைக்கு நடுவே இறங்கவும் முயற்சித்தனர். எனினும் இவை தொடர்பில் அலட்டிக்கொள்ளாத முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தொடர்ந்தும் கொரோனா தடுப்பூசிகள் கொள்வனவில் மோசடி செய்யப்பட்ட பணம் எவ்வளவு?யார் யார் பங்கு போட்டீர்கள்? எனக் கேட்டு அரசை கடுமையாக விமர்சனம் செய்து கொண்டிருந்தார்.

இவ்வாறு சுமார் 15 நிமிடங்களுக்கு மேலாக முஜிபுர் ரஹ்மான் எம்.பி. யின் உரையால் சபை அல்லோலகல்லோலப்பட்டது.

## வடக்கு வைத்தியசாலைகளை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அமைச்சரிடம் நேரடியாக கோரிக்கை விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

மாகாணசபைகளின் கீழிருந்த பல அதிகாரங்கள் திட்டமிடப்பட்டு மத்திய அரசினால் பறிக்கப்படுகின்ற ,மீளப் பெறப்படுகின்ற ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மாகாண சபைகளுக்கிருக்கின்ற நிதி,பொலிஸ் ,காணி அதிகாரங்கள் அரசியலமைப்பில் எழுத்து வடிவத்தில். மட்டுமே உள்ளன .நடைமுறையில் அவை எல்லாம் மாகாண சபைகளிடமிருந்து பிடுங்கப்பட்டு மத்தியில் சேர்க்கப்பட்டுள்ளன.

அதேபோல்தான் மாவட்ட வைத்தியசாலைகளும் கடந்த ஆண்டிலிருந்து மாகாண சபைகளிடமிருந்து பறிக்கின்ற நிலைமையை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இந்த நாட்டிலுள்ள 9 மாவட்ட பொது வைத்தியசாலைகளை மாகாணத்திலிருந்து பறித்தெடுத்து மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த 9 மாவட்ட பொது வைத்தியசாலைகளில் மன்னார், வவுனியா. முல்லைத்தீவு. கிளிநொச்சி வைத்தியசாலைகளை மத்திய அரசு சுவீகரிக்கின்ற செயற்பாட்டை மாற்றியமைக்குமாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

## கஞ்சா விற்கத் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வரவு-செலவுத் திட்டத்தின் சுகாதார அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சம்பிரதாய மருத்துவத்தை சட்டப்பூர்வமாக்க நடவடிக்கையெடுக்கப்படவுள்ளது. குறிப்பாக கஞ்சா மூலம் புற்றுநோயை குணப்படுத்த முடியுமென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சுதேச மருத்துவ முறைகளை ஊக்குவித்து அதற்கு தேவையான மூலப்பொருட்களை இங்கேயே உற்பத்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

இதன்போது அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய வகையில் வேலைத்திட்டங்களையும் நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம். குறிப்பாக கஞ்சாவை ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்ள முடியும். இதன்படி அதனை ஏற்றுமதி செய்வதற்கு தேவையான சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கு அனுமதி பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## ஒமிக்ரான் திரிபை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள ஒமிக்ரான் கொரோனா திரிபு வைரஸ் 15 சர்வதேச நாடுகளில் பரவி வருவதாக அறிய முடிகின்றது. இலங்கையில் அதனை எதிர்கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன .

இத் திரிபு வைரஸ் பரவும் வேகம், அதனால் ஏற்படும் மரணங்கள், அதற்கு தடுப்பூசி சாத்தியமா?, பி.சி.ஆர். மூலம் அதனை இனங்கண்டுகொள்ள முடியுமா?அதற்கான நோய் அறிகுறிகள் என்ன? என்பது தொடர்பில் இதுவரை உலக சுகாதார ஸ்தாபனம் தெளிவான விபரங்கள் எதையும் தெரிவிக்கவில்லை. கொரோனா வைரஸ் உலக தொற்று என்பதால் அதில் எவ்வாறான புதிய திரிபுகள் வந்தாலும் அது உலக தொற்றாகவே நாம் கருதி செயற்பட வேண்டும். இதுவரை நாம் அதனை கட்டுப்படுத்துவதற்கு சாத்தியமான வகையில் தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்கியள்ளோம். எதிர்காலத்திலும் அனைத்து முயற்சிகளும் எடுப்போம் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். ஒமிக்ரான் திரிபு வைரஸ் பரவும் நாடுகளிலிருந்து சுற்றுலா பயணிகள் எமது நாட்டுக்கு வருவது கடந்த 28ஆம் திகதி முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த வாரங்களில் அவ்வாறு இலங்கைக்கு வந்துள்ளவர்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

சர்வதேச அளவில் வரவேற்பை பெறும் வகையில் எமது நாட்டில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் இது வரை எமது சனத்தொகையில் 84 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கைகளில் சுகாதாரத் துறையினர் படையினர் மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாடு முழுவதுமுள்ள ஆஸ்பத்திரிகள் ஒன்றிணைந்து திட்டமிட்டு செயற்பாடுகளை மேற்கொண்டமை தொடர்பில் நன்றி தெரிவிக்கின்றோம். உலக சுகாதார அமைப்பு, யுனிசெப் நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் எமது செயற்பாடுகளை பாராட்டியுள்ளன என்றார்.

## ஆயுத முனையில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் மாதகல் கிழக்கு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை சுவீகரிக்கும் முயற்சி கடும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. மாதகல் கிழக்கு ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவு, குசுமந்துறையில் தனியாருக்கு சொந்தமான 1 பரப்பு காணி கடற்படையினரின் தேவைக்கு சுவீகரிப்புக்காக அளவீட்டு பணிகள் நேற்று நில அளவை திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவிருந்தது.

இதற்கிடையே நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கடற்படையினர் தமது வீட்டுக்கு வருகைதந்து காணியினை வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து கையொப்பம் வைக்குமாறு கேட்டதாக காணி உரிமையாளர் தெரிவித்தார்.

அவர் அதற்கு சம்மதம் தெரிவிக்காத நிலையில் நேற்று பலவந்தமாக காணியை ஆக்கிரமிக்கும் முயற்சியாக காணி அளவீட்டு பணியை முன்னெடுக்க நில அளவைத் திணைக்களத்தினர் அங்கு வந்தனர். அளவீட்டு பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக குறித்த இடங்களில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் இதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். இதன்போது கடற்படையினர் கொட்டான்களுடன் குவிக்கப்பட்டு, மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

காணியினை அளப்பதற்கு எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் இருந்து சென்றுள்ளனர்.

தொடர்ந்தும் அரசியல் பிரமுகர்கள் மற்றும் கிராம மக்கள் கடற்படை முகாமிற்கு முன்பு அமர்ந்து இருந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்துயதை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த இளவாலை பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கலந்துரையாடினர். சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எதிர்வரும் இரண்டாம் திகதி சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடுவதாக வாக்குறுதி வழங்கியமை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

இவ்வாறுதங்களது காணிகளை படையினரின் ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்க தினம் தினம் மக்கள் போராடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40,75)

## எந்தச் சலுகைகளும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன்னால் நேற்று காலை 9.30 மணியளவில் காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் கூடி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடும் வேண்டாம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா என போராட்டத்தில் ஈடுபட்டோர் கோஷங்களை எழுப்பினர். ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது .

போராட்டம் நடைபெற்ற பகுதியில் பொலிஸாரும் புலனாய்வுப்பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதேபோன்று கிளிநொச்சியிலும் நேற்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்திற்கு முன்னால் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.(ச-40,55)

## நான்காவது சடலம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி கிழக்கு - மணல்காடு, வல்வெட்டித்துறை, ஆகிய பகுதிகளில் 3 சடலங்கள் கரையொதுங்கிய நிலையில் நேற்று மேலும் ஒரு சடலம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் கரை ஒதுங்கியது.

நேற்று கரையொதுங்கிய சடலம் பெரும்பாலும் உருக்குலைந்து காணப்பட்டது.

இவ்வாறு கரையொதுங்கிய நான்கு சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

வழக்கமாக இந்திய, இலங்கை மீனவர்கள் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்களில் சிக்கி காணாமல் போன பின்னர் இவ்வாறு சடலங்களாக யாழ்.கடலோர பகுதிகளில் கரையொதுங்குவது வழமை. எனினும் இவ்வாறான சம்பவங்கள் கடந்த வாரத்தில் இடம்பெற்றதாக தகவல்கள் ஏதும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-75,18)

## கொட்டான்களுடன் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதத்தில் செயற்பட்டார்.

இதேவேளை அங்கிருந்த புலனாய்வாளர் ஒருவர், போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் மீது கை காட்டி, மிரட்டி அச்சுறுத்தல் விடுத்தார்.

மேலும் ஒரு கடற்படை சிப்பாய் கொட்டானைக் கையில் வைத்து மிரட்டல் விடுத்துக்கொண்டிருந்தார்.

இதனைவிட அச்சுறுத்தும் வகையில் கடற்படையினர் போராட்டத்தின் போது ஆயுதங்களைத் தாங்கியவாறு துப்பாக்கிச் சூடு நடத்த தயார் நிலையில் இருந்தவர்கள் போன்று அச்சுறுத்தினர். மக்களது ஜனநாயக முறையிலான போராட்டத்தை ஒடுக்கும் விதமாக இவ்வாறு செயற்படுவது, அரசின் அராஜக போக்கினை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகிறது என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.(40,75)

## சிலிண்டர் வெடிப்பு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் அங்கத்தவர்களாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அஜித் டீ சில்வா, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டபிள்யூ.டீ.டபிள்யூ.ஜயதிலக்க, பேரசிரியர் பிரதீப் ஜயவீர, இலங்கை புத்துருவாக்க ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் நாராயண் ஸ்ரீமுத்து, கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுதர்ஷன சோமசிறி, இலங்கைத் தர நிர்ணய நிறுவனத்தின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் சுஜீவ மஹாகம ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தேவையான மற்றும் ஏற்கனவே உள்ள அனைத்து ஆய்வுகள் மற்றும் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களை ஆராய்ந்து, இரண்டு வாரங்களுக்குள் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு, ஜனாதிபதியினால் அவர்களினால் அக்குழுவினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

## பண்டிகைக் காலத்தில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக தடுப்பூசிகளை செலுத்தி மீண்டும் நாட்டை திறந்துள்ளோம். இதனூடாக நாட்டில் கொவிட் தொற்று முற்றாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று அர்த்தப்படாது. எவ்வாறாயினும் நாட்டில் அனைவரும் பாதுகாக்கப்படும் வரையில் நாடு பாதுகாப்பாக இருக்கின்றது என்று கூற முடியாது. இதனால் எதிர்வரும் பண்டிகை காலத்தில் பொறுப்புடன் தமது பாதுகாப்பையும் தமது குடும்பத்தையும் பாதுகாக்கும் வகையில் சுகாதார ஒழுங்குவிதிகளை பின்பற்றி நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

## 60 இலட்சம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் கடந்த சில தினங்களாக நாட்டின் பல்வேறு இடங்களில் எரிவாயு சிலிண்டர் வெடித்த சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. கடந்த இரண்டு தினங்களில் மாத்திரம் இவ்வாறான சம்பவங்கள் 11 பதிவாகி இருக்கின்றன.

இந்த பிரச்சினை இந்த வருடம் ஆரம்பத்தில் 18 லீற்றர் கொள்ளளவு கொண்ட ஹைப்ரிட் வகை சிலிண்டர் ஒன்றை அறிமுகப்படுத்திய பின்னாரகும். நுகர்வோரை ஏமாற்றி அதிக இலாபம் ஈட்டிக்கொள்ளும் நோக்கிலே இது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதுதொடர்பாக நுகர்வோர் அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறித்த நிறுவனத்துக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளபோதும் இடம்பெற்ற நடவடிக்கையால் வெடிப்பு சம்பவங்கள் நாடுபூராகவும் இடம்பெறுவதை அறியக்கிடைக்கின்றன. இந்த பிரச்சினைக்கு குறுகிய, மத்திய மற்றும் நீண்டகால தீர்வுகளை வழங்கி இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும். அதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைத்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## தாய்க்கும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசவிப்பதற்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்பட்ட போது தாயாருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவருக்கு குழந்தை பிறந்துள்ளது. பரிசோதனையில் சிசுவிற்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (21)

## ஒமிக்ரான் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாடொன்றில் ஒரு மில்லியன் பேரில் கொரோனா தொற்றால் இறப்போரின் எண்ணிக்கை தொடர்பில் பார்த்தால் எமது நாட்டில் ஒரு மில்லியன் பேருக்கு 664 பேர் மரணமடைந்துள்ளனர். அந்தத் தொகை இந்தியாவில் 334 ஆகவும் மாலைதீவில் 442ஆகவும் ஆப்கானிஸ்தானில் 182 ஆகவும் பங்களாதேஷில் 160 ஆகவும் பாகிஸ்தானில் 126 ஆகவும் காணப்படுகிறது.

அந்தவகையில் ஏனைய நாடுகளை விட, எமது நாட்டில் அதிகமானோர் கொரோனா வைரஸ் நோயினால் மரணமடைந்துள்ளனர். இந்நிலையில் ஒமிக்ரான் நாட்டுக்குள் வருவதை தடுக்க வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதற்காக விமான நிலையத்தில் முறையான முகாமைத்துவம் அவசியமாகும். இது போன்ற வைரஸ் நாட்டுக்குள் வந்தால் எங்களை போன்ற சிறிய நாடுகளினால் ஈடுகொடுக்க முடியாது. இதனால் எத்தனை பேர் மிஞ்சுவார்கள் என்றும் கூற முடியாது இதனால் முறையான வேலைத்திட்டங்கள் அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார்.

# பெரிய பரந்தனில் புதிய மதுபானசாலை; தடுத்து நிறுத்தக்கோரி கவனயீர்ப்பு போர்





கிளிநொச்சி-பெரிய பரந்தன் பிரதேசத்தில் புதிய மதுபானசாலை அமைப்பதற்கு எடுத்த முயற்சிகளை நிறுத்துமாறு கோரி பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பெரிய பரந்தன் பிரதேசத்தில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைப்பதற்கு நீண்ட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் பல தடவை முயற்சிகள் நடந்த போதும் பெரிய பரந்தன் பிரதேச மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் பிரதேச மக்களின் ஆட்சேபனைகளை மகஜர்களாக கையளித்ததோடு பல தடவைகள் பொது மக்கள் ஒன்று சேர்ந்து எதிர்ப்பு போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் மீண்டும் நேற்றைய தினம் கரைச்சி பிரதேச செயலகம் முன்பாக பெரிய பரந்தன் பிரதேச மக்கள் மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொரோனா பாதுகாப்புடன் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது, புதிய மதுபானசாலை அமையவுள்ள இடத்திற்கு அருகில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, விஞ்ஞானக் கல்வி நிலையம் உள்ளிட்ட கல்வி நிலையங்கள் காணப்படுவதாக பலமுறை மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் பொது மக்கள் பெரிய பரந்தன் கிராமத்தில் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் காணப்படுகின்ற நிலையில் அவற்றில் பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள்.

எனவே, தமது பிரதேசத்தில் புதிய மதுபானசாலை அமைவதானது பெரும் பொருளாதார மற்றும் கலாசார பாதிப்புக்களையும் ஏற்படுத்தும் என்றும் புதிய மதுபானசாலை உருவாகுமானால் குறித்த பிரதேசத்தில் வறுமையோடு குடும்ப வன்முறையும் அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் குறித்த பிரதேசத்தில் புதிய மதுபானசாலையினை அமைப்பது தொடர்பில் ஒட்டுமொத்த மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து மக்களின் உணர்வுகளை கருத்தில் கொள்ளவேண்டுமென அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளதுடன் எமது பிரதேச சமூகத்துக்கு பாரிய பிரச்சினைகளை உருவாக்கும் வகையில் அமையும் மதுபானசாலையினை தடுத்து நிறுத்துமாறும் பொது மக்கள் உரிய அதிகாரிகளை கோரியுள்ளனர். (ஜெ-30)

## மீசாலையில் வீட்டு வளவிற்குள் புகுந்து பெண்ணின் சங்கிலி அறுப்பு

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை மேற்குப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பகல் பெண்ணொருவரின் இரண்டு பவுண் சங்கிலி கொள்ளையர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவ்வாறு பெண்ணொருவரை அழைத்து சங்கிலி அறுக்க முற்பட்டுள்ளனர். இதன் போது சுதாகரித்துக்கொண்டு வீட்டு காணிக்குள் ஓடி வந்த பெண்ணை பின்னால் கலைத்து வந்து சங்கிலியை அறுத்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (13)

## சிறுவனின் முகநூல் கோரிக்கையை ஏற்று 50 குடும்பங்களுக்கு உதவி

காரைநகர் பகுதியில் அண்மைய இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டு உதவியற்ற நிலையில் இருக்கும் மக்களுக்கு உதவுமாறு சிறுவன் முகநூலில் விடுத்த கோரிக்கைக்கு அமைய பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு தலா 1,000 ரூபா பெறுமதியான உலருணவு பொதி நேற்று வழங்கப்பட்டது.

யாழ். இந்துக் கல்லூரியில் தரம் -06 இல் கற்கும் ராஜிவன் கிஷான் உதவியற்ற மக்களுக்கு உதவுமாறு முகநூலில் பதிவிட்டிருந்தார். இதனைப் பார்த்த நாகர்கோவில் இளைஞர்கள் மற்றும் நாகர்கோவிலை சேர்ந்த புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கருவிக்கு சுவாபிமானி 2020 தேசிய விருது



அங்கவீனமுற்ற நபர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் நிறுவனங்களைத் தரப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் சமுக சேவை திணைக்களத்தினால் கருவி நிறுவனம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. கடந்த 11 ஆம் திகதி பத்தரமுல்ல பலவத்தை அபே கம வளாகத்தில் நடைபெற்ற சுவாபிமானி 2020 விருது விழாவில் கருவி நிறுவனத்தின் சார்பில் செயலாளர் து.ஜசிந்தன் மற்றும் பொருளாளர் கொன் கிளேடியஸ் ஆகியோர் இவ்விருதைப் பெற்றுக்கொண்டனர்.

## இழக்கப்பட்ட கல்வியை முடிக்கும் கால எல்லை குறித்துக் கவலை

ரொசான் நாகலிங்கம்

இரு வருடம் இழக்கப்பட்ட கல்வியை விசேட வேலைத்திட்டம் இல்லாது மூன்று மாதத்திற்குள், முடிக்குமாறு ஆசிரியர்களுக்கு அழுத்தம் கொடுப்பது நியாயமற்ற செயற்பாடென ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளதுடன் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு, கற்பிக்கும் போது கல்வித் தரம் வீழ்ச்சியுறுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

கொழும்பில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியளார் மாநாட்டில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மகிந்த ஜெயசிங்க, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஜோசப் ஸ்டாலின் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிகள் கலந்து கொண்டு பேசுகையிலயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அங்கு மேலும் பேசுகையில்:

ஆசிரியர்களுக்கான கடமை நேரம் காலை 7.30 லிருந்து பிற்பகல் 1.30 வரையாகும். இவ்வாறான நிலையில் கடமை நேரம் முடிந்த பின்னர், ஆசிரியர்கள் விருப்பினால் மாத்திரமே மேலதிக வகுப்புக்களை நடத்தலாமே யொழிய மேலதிக வகுப்புக்களை நடத்துமாறு அதிகாரிகள் அழுத்தம் கொடுக்க முடியாது.

இது இவ்வாறிருக்க ஆசிரியர்கள் தற்போது சட்டப்படி வேலையை முன்னெடுத்து வரும் நிலையில் கற்பித்தல் மட்டுமன்றி மேலதிக வேலைகள் எவையையும் செய்வதில்லை.இவ்வாறான நிலையில் ஆசிரியர்களை மேலதிகமாக வேலைகளை செய்யுமாறு பணிக்கக் கூடாது.

இதேவேளை கொரோனாவினால் பாடசாலைகள் இயங்காததையடுத்து மாணவர்களுக்கு புகட்டவேண்டிய இருவருட கல்வியை, அதற்காக விசேட பாடத்திட்டத்தை தயாரித்து 100 நாட்களில் முடிப்பதற்கான கோரிக்கையை ஆசிரியர்கள் முன்வைத்தனர். இவ்வாறான நிலையில் 2020இல் 60 வீதத்தையும் 2021இல் 40 வீதத்தையும் முடிப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இவ்வாறான நிலையில், கல்வியமைச்சு மூன்று மாதத்திற்குள் பாடத்திட்டத்தை முடிக்குமாறு கூறுகின்றது.

கொரோனா காரணமாக சுகாதார இடைவெளியை பேணும் முகமாக மொத்தப் பிள்ளைகளில் அரைவாசி பேரையே ஒரு நாளில் கற்பிக்க முடிகின்றது. அதேவேளை மாணவர்களுக்கு கல்வியை அழுத்தக் கூடாது. அவ்வாறு செய்யப்படின் மாணவர்கள் மன உழைச்சலுக்குள்ளாவர். அத்துடன் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு கற்பிப்பதால் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியுறும். எனவே மூன்று மாதத்திற்குள் கல்வியை முடிக்குமாறு கூறுவது நியாயமற்றது என்றனர்.

## இதுவரை 21 வெடிப்புகள்

க.பிரசன்னா

நாட்டில் தொடர்ச்சியாக எரிவாயு கசிவின் மூலமான வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டு வரும் நிலையில் நேற்றும் இரண்டு வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நவம்பர் மாதத்தில் இதுவரை 21 வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று தியத்தலாவையிலுள்ள தொடம்வத்தை ஹெலவத்தையில் உள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளதாக தியத்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கதுருகசர பிரதேசத்தில் கடையொன்றின் பின்புறத்தில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் நாடு முழுவதும் பத்து எரிவாயுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஹட்டன் மல்லியப்பூ, ஜா-எல, மாரவில, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஹங்வெல்ல, பாதுக்க, எம்பிலிபிட்டிய, மாவனல்லை மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் இவ்வெடிப்பு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டில் இரண்டு வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த நவம்பர் 4 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 28 ஆம் திகதி வரை மொத்தமாக ஒன்பது வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வெலிகம- கபரதொட்ட, பொலனறுவை - வெலிகந்த, இரத்தினபுரி, கொழும்பு 7 குதிரைப்பந்தயத் திடல், பன்னிப்பிட்டிய - கொட்டாவ, சாய்ந்தமருது, யாழ்ப்பாணம் - கந்தரோடை மற்றும் கேகாலை - கஹட்டபிட்டி, நிக்கவரெட்டிய - கந்தேகெதர ஆகிய பகுதிகளில் இச்சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டன.

எரிவாயு நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்படாத எரிவாயு கலவையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் காரணமாகவே நாடு முழுவதும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுவதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

## கரவெட்டியில் கைகலப்பு இளைஞர் படுகாயம்

கரவெட்டி மேற்கு பகுதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த தனபாலசிங்கம் லக்சன்(வயது-28) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளானார். உறவினர்களிடையே ஏற்பட்ட கைகலப்பின் போது இவர் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(44)

## ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் நாளை திறந்து வைக்கப்படவுள்ளது



யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தூய நகரம் திட்டத்திற்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா 2021 நாளை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர முதல்வரின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவும்,சிறப்பு விருந்தினர்களாக தியாகேந்திரன் அர்ச்சுனா மற்றும் நிலாஜினி தியாகேந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர், மாநகர சபை உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் இசைக் கலைஞர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற உள்ளதோடு, கே.பி.குமரன் பஞ்சமூர்த்தி குழுவினரின் நாதசங்கம், வாண வேடிக்கைகள், தண்ணீர் விசிறல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது.(40)

## சிறுப்பிட்டி இளைஞனின் மரணத்தில் சந்தேகம் நடவடிக்கை எடுக்குமாறு கோரி போராட்டம்



அண்மையில் சிறுப்பிட்டி பகுதியில் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படும் இளைஞனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை கிராம மக்கள் ஒன்று திரண்டு கவனயீர்ப்பு போராட்டம் நடத்தினர்.

போராட்டம் நடத்திய மக்கள் தெரிவிக்கையில், அண்மையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்ட இளைஞனின் மரணத்தில் சந்தேகம் இருக்கிறது.

அவர் தூக்கிலிட்டு தற்கொலை செய்யவில்லை மாறாக கொலை செய்யப்பட்டதாக நாம் நம்புகிறோம்.

ஆகவே, பொலிஸார் குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி நீதியான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என போராட்டக்காரர்கள் கோசம் எழுப்பினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த அச்சுவேலி பொலிஸார் போராட்டம் நடத்தியவர்களுடன் பேசுகையில் குறித்த மரணம் தொடர்பில் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்ளும்.

மரணத்தில் சந்தேகம் இருப்பின் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொண்டனர்.(75)

## அரசுக்குள் பிளவென யாரும் கருத வேண்டாம்

### -அமைச்சரவை பேச்சாளர் டளஸ்-

ந.ஜெயகாந்தன்

அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகளுக்கு இடையே நிலவும் கருத்து முரண்பாட்டை அரசாங்கம் பிளவுப்பட்டுள்ளது என்று அர்த்தப்படாது என்றும், இதனை ஆரோக்கியமான நிலைமையாகவே பார்க்க வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில், பொதுஜன பெரமுனவிற்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நிலவும் கருத்து மோதல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

கூட்டணி அரசாங்கமுள்ள அனைத்து நாடுகளிலும் இவ்வாறு முரண்பாடு ஏற்படும். நாம் 1970-77 காலத்தில் சமகி பெரமுன இருந்தது. அதன் பின்னரும் கூட்டணி அரசே இருந்தது. வரலாற்றில் 1956 அரசும் கூட்டணி அரசே .அன்றும் கருத்து முரண்பாடு இருந்தது. கட்சிகளிடையேயான கருத்துமுரண்பாடு ஆரோக்கியமான நிலைமையாகவே நோக்க வேண்டும். எமது அரசின் அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கூட முன்வைக்கப்பட்டது. அதன் மூலம் அரசு பிரியவில்லை. அரசாங்கத்திற்குள் பல்வேறுபட்ட கருத்துக்கள் முரண்பாடுகள் ஏற்படுவது ஆரோக்கியமான போக்காகும்.

இந்திய-பிரித்தானிய கூட்டணி அரசுகளில் கூட இந்த நிலை உள்ளது. கூட்டணி என்பதே வேறுபட்ட கருத்துகளின் கூட்டணியாகும். எதிர்க்கட்சி என்பதும் பெரிய கூட்டணியாகும். அங்கும் மாறுபட்ட கருத்து இருக்கிறது. அதற்காக யாரும் எதிரிணி பிரியப்போகிறது என்று சொல்வதில்லை. இது ஆரோக்கியமான ஜனநாயகத்தின் அடையாளம். அதனை விடுத்து இந்த நிலை கட்சிகளின் இறுதிக்கட்டம் என கருதக் கூடாது என்றார்.

## இழுவைமடி தடைச் சட்டத்தை அமுல்படுத்துமாறு வலியுத்தல்

### -வடக்கில் இன்று கையெழுத்து போராட்டம் -

-றொசான் நாகலிங்கம்-

இழுவைமடி தடைச் சட்டத்தை அமுல்படுத்துமாறு வலியுத்தி வடக்கில் கையெழுத்து போராட்டத்தை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் இன்று புதன்னிழமை ஆரம்பிக்கவுள்ளது.

இன்றைய போராட்டம் கிளிநொச்சியில் -பூநகரில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பின் தேசிய அமைப்பாளர் அன்டனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

இழுவைமடிச் சட்டத்தை அமுல்படுத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் வடக்கில் கையெழுத்து வேட்டை போராட்டத்தை இன்று முதலாம் திகதி முதல் எதிர்வரும் நான்காம் திகதிவரை முன்னெடுக்கவுள்ளோம். இதன் ஆரம்ப நிகழ்வு பூநகரியில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. இப்போராட்டம் நாளை வியாழக்கிழமை மன்னாரிலும், நாளை மறுதினம் முல்லைத்தீவிலும் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கவுள்ளோம்.

எம்மால் முன்னெடுக்கவுள்ள போராட்டத்தின் போது பத்தாயிரம் கையெழுத்துக்களை பெற எதிர்பார்த்துள்ளோம்.

இழுவைமடிச் சட்டத்தை அமுல்படுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான மகஜரில் பெறப்படும் கையெழுத்துக்கள் அடங்கிய பிரதிகள் ஜனாதிபதி, கடற்தொழில் அமைச்சர் மற்றும் சட்டமாதிபருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. அத்துடன் இதனைக் கொண்டு உயர் நீதிமன்றத்தில் வழக்கினைத் தாக்கல் செய்யவுள்ளோம் என்றார்.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
புதன்கிழமை 01 டிசம்பர் 2021 Wednesday 01st December 2021

## மீண்டும் உலகை கிலி கொள்ளவைக்கும் கொரோனாவின் ஐந்தாவது உருத்திரிபு

புதிதாக கண்டறியப்பட்ட கோவிட் -19 இன் உருத்திரிபான ஒமிக்ரோன் நாட்டிற்குள் நுழைவது தவிர்க்க முடியாததென்று இலங்கை மருத்துவ சங்கம் உட்பட சுகாதாரத்துறை சார்ந்த சங்கங்களும் அமைப்புகளும் எச்சரித்துள்ளன .புதிய உருத்திரிபு நாட்டிற்குள் நுழையாமல் இருப்பதை உறுதிப்படுத்த அதிகாரிகள் ஏற்கனவே மேற்கொண்டது போன்று சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் டாக்டர் பத்மா குணரத்ன கூறியுள்ளார் .'புதிய உருத்திரிபின் பிரவேசம் தாமதமாகலாம் என்றாலும், அது ஒருபோதும் நாட்டிற்குள் நுழையாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்று நாங்கள் கருதுகிறோம்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார் .இதேவேளை, புதிய உருத்திரிபுகள் நாட்டிற்குள் நுழையக்கூடிய பல துவாரங்கள் இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்திருப்பதுடன் ,விமான நிலையத்தில் உள்ள முறைமை மிகவும் பலவீனமாக உள்ளதாகவும் , சுற்றுலாப் பயணிகள் வருகைதந்த பின் சுகாதார அதிகாரிகளைத் தவிர்க்கலாமெனவும் அதிகாரிகள் இதில் விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள புதிய கொரோனா வைரஸ் உருத்திரிபு உலக நாடுகளை மீண்டும் கிலிகொள்ள வைத்துள்ளது. புதிய உருத்திரிபு அதிக எண்ணிக்கையிலான பிறழ்வுகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.இதனால் நாட்டுக்கு கடுமையான சுகாதார ரீதியான தாக்கங்கள் ஏற்படுமென தெரிவிக்கப்படுகிறது. கொரோனா வைரஸின் இந்த உருத்திரிபு அதிக எண்ணிக்கையிலான பிறழ்வுகளைக் கொண்டுள்ளது. அவற்றில் சில தொடர்புடையவை. உலக சுகாதார அமைப்பு பி .1.1.529 மாறுபாடு அல்லது ஒமிக்ரோனை சார்ஸ் -சி ஓவி -2 என்று வகைப்படுத்தியதுடன் ,இது ஏனைய வகை கொரோனா வைரஸ்களைக் காட்டிலும் விரைவாக பரவக்கூடும் என்று கூறியிருந்தது .ஒமிக்ரோன் என்று பெயரிடப்பட்ட புதிய உருத்திரிபை 'கவலையின் உருத்திரிபு ' என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்திருக்கிறது. ஒமிக்ரோனின் பரவல் தென்னாபிரிக்கா,பொட்ஸ்வானா, பெல்ஜியம், ஹொங்கொங் மற்றும் இஸ்ரேலிலும் பதிவாகியுள்ளது. இந்த உருத்திரிபு ஐரோப்பாவிலும் கண்டுபிடிக்கப்படுகிறது. பிரிட்டன் இரண்டு தொற்றுகள் தொடர்பாக பதிவு செய்துள்ளது . இது அதிகரிப்புக்கு வழிவகுக்குமா என்பது குறித்து விஞ்ஞானிகளுக்குத் தெரியாது. ஆனால் இது அதிக மீள் தொற்று அபாயத்தைக் கொண்டுள்ளது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஒமிக்ரோன் தொடர்பான உலக சுகாதார அமைப்பின் பிரகடனத்திற்குப் பிறகு, பல்வேறு நாடுகள் கடந்த வார இறுதியில் பயணக் கட்டுப்பாடுகளை அறிவித்திருந்தன.அத்துடன் இந்த உருத்திரிபிற்கு தடுப்பூசிகள் பாதுகாப்பாக உள்ளதா என்பதைப் பார்க்க ஆய்வுகளும்மேற்கொள்ளப்படுகின்றன. டெல்டா உருத்திரிபு உலகளவில் கொரோனாவின் மிகவும் ஆதிக்கமுள்ள உருத்திரிபு என்று கூறப்பட்ட நிலையில், தொற்று வீதத்தில் ஒமிக்ரோன் டெல்டா உருத்திரிபை விஞ்சிவிடும் என்று அஞ்சப்படுகிறது. அதேவேளை உருத்திரிபால் ஏற்படும் நோயின் வகையை வரையறுத்து, அது உண்மையில் எவ்வளவுக்கு கடுமையானது என்பதைத் தீர்மானிக்க இன்னும் பல வாரங்கள் ஆகலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தற்போதைய சூழ்நிலையில், கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் புதிய உருத்திரிபை தாங்குமா என்ற மிகப்பெரிய கேள்வி எழுகிறது. அதேநேரத்தில்,முன்பு கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் ஒமிக்ரோன் நோய்த் தொற்றிலிருந்து தப்புவதற்கான நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்களா என்பது மற்றொரு கேள்வி .ஏனைய கொரோனா வைரஸ் உருத்திரிபுகளுடன் ஒப்பிடும்போது ஒமிக்ரோன் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பாதிப்பை ஏற்படுத்துமா என்பது பற்றி நிபுணர்களுக்கு இன்னும் தெரியவில்லை.

இதற்கிடையில், புதிய மாறுபாடு கண்டறியப்பட்ட பிறகு, தென்னாபிரிக்காவில் இருந்து பயணத்தை நிறுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன. தென்னாபிரிக்கா மற்றும் அண்டை நாடுகளில் இருந்து பயணம் செய்வதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. இந்த தொற்றுநோய் இன்னும் வெகு தொலைவில் உள்ளது . உலகின் பிற பகுதிகளில் வைரஸின் பரவலை எதிர்த்துப் போராட வளர்ந்த நாடுகள் அதிகம் செய்ய வேண்டும் என்பதற்கான எச்சரிக்கையாகவும் இது தோன்றுகிறது .அரசாங்கக் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் பாதுகாப்பாக இருக்க, தனியாட்கள் எதிர்வரும் நாட்களில் பயண முடிவுகளை எடுப்பதற்கு முன், கோவிட் நோயால் ஏற்படக்கூடிய தங்கள் சொந்த பாதிப்பை மதிப்பீடு செய்ய வேண்டும். கொரோனா வைரஸின் ஐந்தாவது உருத்திரிபான ஒமிக்ரோனுக்கு எதிரான செயல்திறன் பற்றிய கேள்விகள் இருந்தபோதிலும் தடுப்பூசியே முதன்மையானதாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்வது அவசியம். ஏனெனில் அவை இன்னும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பாதுகாப்பாக இருக்கும். வயதானவர்கள் , தொற்றாநோய் உள்ளவர்களைப் பாதுகாக்க தடுப்பூசி மிகவும் முக்கியமானது. இரண்டு குழுக்களும் முழுமையாக தடுப்பூசி போடப்படாவிட்டால், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கும் மரணமடைவதற்குமான அதிக ஆபத்து உள்ளதென்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றமை கவலைக்குரிய விடயம். என்னவெனில் பல உருத்திரிபுகள் ,அவற்றின் வேகமாகப் பரவும் தன்மையால் தடுப்பூசிகளுக்கு எதிர்ப்பைக் குறைக்கின்றன.அனைவரும் தொடர்ந்து முகக் கவசங்களை அணிய வேண்டும், கூட்டத்தைத் தவிர்க்க வேண்டும், காற்றோட்டமான இடத்தில் தங்க வேண்டும், கைகளை கழுவ வேண்டும், ஏனைய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.இவையே எம்முன்னால் உள்ள சாத்தியமான தீர்வு.

# "எமது கிராமத்துக்கு எம்மால் செல்ல முடியாதுள்ளதே ..."



மீரா ஸ்ரீநிவாசன்

யாழ். குடாநாட்டின் கிழக்கு முனையில் அமைந்துள்ள கண்டிக்குளம் கிராமத்தின் விவசாயிகள் அசாதாரணமான சவாலை எதிர்கொண்டுள்ளனர்.

சமீபகாலமாக காய்கறிகளை பயிரிட்ட அவர்களது நிலங்களுக்கு செல்ல முடியாமல் தவிக்கின்றனர். வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் எல்லைக் கற்கள் எங்களின் காணிகளில் முளைத்துள்ளன என்று அங்கு வசிக்கும் எஸ்.அருந்தவராஜா என்பவர் 'டி. டபிள்யூ. சி. ' என்ற எழுத்துகள் வரையப்பட்ட பழுப்பான சாம்பல் நிறக் கல்லை சுட்டிக்காட்டினார். 'எங்கள் நிலங்களில் இது போன்ற ஒரு கல் போடப்பட்டால், அது அரசாங்கத்தின் வனப் பாதுகாப்பு முயற்சியின் ஒரு பகுதியாக இருப்பதால், அந்தப் பகுதிக்குள் நுழைய வேண்டாம் என்று எங்களுக்கு கூறப்பட்டுள்ளது 'என்று அவர் தெரிவித்தார் .

இலங்கையில்தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் ஒரு பரவலான கவலையின் மற்றொரு பிரதிபலிப்பே அவரது பிரச்சினையாகும். ஒருபுறம், இலங்கையின் போருக்குப் பின்னரான தசாப்தத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் இராணுவத்தின் வசம் இருந்தபொது மக்களின் காணிகளை மீள வழங்கியதற்கான பதிவுகளைக் காட்டுகின்றன. மறுபுறம், பல ஆண்டுகளாக போர்க்கால இடப்பெயர்வைத் தொடர்ந்து தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிய ஏராளமான குடும்பங்கள், அரசாங்கத்தின் தொல்லியல் மற்றும் வனவளத் திணைக்களத்திடமிருந்து தங்கள் நிலம் தொடர்பாக எதிர்கொள்ளும் மிக சமீபத்திய அச்சுறுத்தல்களை எடுத்துக்காட்டுகின்றன. கடந்த ஆண்டு, கிழக்கு மாகாணத்தில் விவசாயிகள் ஒரு முறை பயிரிட்ட அல்லது தங்கள் கால்நடைகளுக்கு மேய்ச்சல் திட்டுகளாகப் பயன்படுத்திய தங்கள் நிலங்களை மீட்டெடுக்க அதிகாரிகளுக்கு சவால் விடுத்து குறைந்தது ஒரு டஜன் வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர் .

### ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகள்

யாழ்ப்பாண நகரத்திலிருந்து ஒரு மணித்தியாலப் பயணத் தூரத்திலுள்ளது கண்டிக்குளம் கிராமம் . கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லையில் உள்ள கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுமார் 250 குடும்பங்கள் வசிக்கின்றன .அவர்கள் பெரும்பாலும் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வாழ்கின்றனர். உள்நாட்டுப் போரின் போது, அவர்கள் முல்லைத்தீவுக்கு இடம்பெயர்ந்தனர். சில குடியிருப்பாளர்கள் அயல் மாவட்டத்திற்கு நடந்து சென்றதை நினைவுகூர்ந்தனர் . மேலும் 2009 மற்றும் 2011 இல் தங்கள் கிராமத்திற்கு படிப்படியாகத் திரும்பினர். நாங்கள் திரும்பி வந்தபோது, இங்கு எதுவும் இல்லை .எங்கள் வீடுகள் அழிக்கப்பட்டிருந்தன. இப்போது, அரசாங்கம் எங்களின் பூர்வீக நிலங்களை 'வனவிலங்கு பாதுகாப்புப் பகுதிகள்'என்று பிரகடனப்படுத்தியுள்ளது என்று சமூகத் தலைவர் நடேசா யோகராஜா கூறினார்.

எங்கள் கிராமத்திலும் அதிக இராணுவ பிரசன்னம் உள்ளது, நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஊடகங்களிடம் பேசினால் கூட சி.ஐ.டி. எங்களை விசாரிக்கும் சாத்தியம் உள்ளது என்று அவர் கூறினார் . வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்தில் பல இராணுவ சோதனைச் சாவடிகள் உள்ளதாக பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். போதைப்பொருள் வர்த்தகத்தைத் தடுப்பதற்காகத்தான் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு நாளும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைப்பற்றப்படும் பெருமளவானவற்றைப் பற்றி நாம் படிக்கிறோம். அதற்குஎன்ன அர்த்தம்? இவ்வளவு கண்காணிப்பு இருந்தும் போதைப்பொருள் எப்படி நம் நாட்டிற்குள் நுழைகிறது? என்று வடக்கின் பல கரையோரப் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் நிலைத்திருப்பதற்கான அரசாங்கத்தின் நியாயப்பாட்டை குறிப்பிட்டு அவர் கேட்டார்.



வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் கூறுகையில்,

பல குடும்பங்கள் தனியார் காணிக்கான உரிமைப்பத்திரம் வைத்திருந்ததாகவும், மேலும் சிலர் பல தசாப்தங்களாக அரச காணியில் விவசாயம் செய்து வருவதாகவும் தெரிவித்தார். 'யுத்தம் முடிவடைந்தவுடன், அரசாங்கம் இந்த நிலங்களை பாதுகாப்பிற்காகஒதுக்கப்பட்ட பகுதிகளாகவர்த்தமானியில் வெளியிடத் தொடங்கியது' என்று அவர் கூறினார். இந்தப் பிரச்சினை, பல ஆண்டுகளாக அரசாங்கங்கள் முழுவதும் நீடிக்கிறது. அதிகாரிகள் அந்தப் பகுதிகளை நேரில் ஆய்வு செய்யவில்லை அல்லது வனவிலங்கு காப்பகப் பகுதிகளாக அறிவிப்பதற்கு முன் பல தலைமுறைகளாக இங்கு வசிக்கும் மக்களுடன் ஆலோசனை நடத்தவில்லை. வடக்கு, கிழக்கெங்கும் இதே கதைதான் என்று அவர் குறிப்பிட்டார்.

'வனத் திணைக்களம் நூற்றுக்கணக்கான ஏக்கர் தனியார் காணிகளை அல்லது மக்களின் அனுமதிப்பத்திர காணிகளை பாதுகாப்பு பிரதேசங்களாக அறிவித்து வருகின்றது' என்று அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேன் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார். அரச காணிகள் மீள் ஒதுக்கீடு செய்யப்படுமாயின், வடக்கு மற்றும் கிழக்கின் குடிப்பரம்பலை மாற்றியமைப்பதற்காக, அது பெரும்பாலும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த உண்மைகளை நாம் கூறும்போது, நாங்கள் இனவாதிகள் அல்லது அல்லது சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மக்களை வெளியில் உள்ள மக்களின் நன்மைக்காக ஏழைகளாக்க முடியாது என அவர் சபையில் தெரிவித்திருந்தார்

### சர்ச்சைக்குரிய பகுதிகள்

இலங்கையின் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் 2018 செயற்பாட்டு அறிக்கையின் படி, முன்னர் பறவைகள் சரணாலயமாக இருந்த கண்டிக்குளத்தில் சுமார் 50,000 ஏக்கர் நிலம் 2015 இல் தேசிய பூங்காவாக தரம் உயர்த்தப்பட்டது. குடியிருப்பாளர்கள் முன்னைய சிறிசேன – விக்கிரமசிங்க நிர்வாகத்திடம் இந்த விடயம் தொடர்பாக கவனத்திற்கு கொண்டுசென்றிருந்தனர். ஆனால் பயனில்லை.

இது தொடர்பாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டாரவை தொடர்பு கொண்டு கேட்ட போது,

கண்டிக்குளம் மக்களின் கவலைகள் குறித்து தனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதாக அவர் தெரிவித்தார். இப்பகுதி தேசிய பூங்காவாக தரம் உயர்த்தப்பட்ட போது, ஆட்கள் வசிக்கும் இடங்கள் பல விலக்கப்பட்டதாக அவர் கூறினார். ஆனால் சில சர்ச்சைக்குரிய பகுதிகள் உள்ளன.

எங்கள் பாதுகாப்புத் திட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்காக நாங்கள் கள ஆய்வை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் தொற்றுநோய் காரணமாக நாங்கள் அதை ஒத்தி வைக்க வேண்டியிருந்தது என்று அவர் இந்துவிடம் கூறினார். விரைவில் உள்ளூர் மக்களிடம் கலந்து பேசி பிரச்சினைக்கு தீர்வு காண்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பி.யோகலட்சுமி (62 வயது) போன்ற குடியிருப்பாளர்களுக்கு, அவரின் தந்தையும் தாத்தாவும் விவசாயம் செய்துகொண்டிருந்ததைப் பார்த்து வளர்ந்த நிலம் , திடீரென்று அவருடைய குடும்பத்திற்கு இல்லாமல் போனது என்பது குழப்பமாக இருக்கிறது. 'பாருங்கள் , எங்களிடம் எல்லா ஆவணங்களும் உள்ளன' என்று அவர் தனது வெளிர்–மஞ்சள் நிற காணி உரிமைப்பத்திரத்துடன் ஒரு கோப்பைத் திறந்தார் .

நடேசா யோகராஜாவின் கூற்றுப்படி,

சமீபத்திய நகர்வுகள் கிராமத்தின் உணவு உற்பத்திக்கும் அச்சுறுத்தலாகவுள்ளன . எங்கள் நிலங்களில் விவசாயம் செய்ய அனுமதித்தால், ஒட்டுமொத்த கிராமமும் தன்னிறைவு பெறும். சட்டவிரோதமாக வேட்டையாடினால் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கட்டும். இத்தனை வருடங்களில் இந்த வாழ்விடத்தில் உள்ள பறவைகள் மற்றும் விலங்குகளை எம் மக்கள் ஒருபோதும் துன்புறுத்தியதில்லை. நாங்கள் ஒன்றாக வாழ்ந்தோம் என்று அவர் கூறியுள்ளார் .

கிராம மக்கள் கொழும்பில் அரசாங்கத்திற்கு எதிராகவோ அல்லது இனப் பிரச்சினைகளை முன்னிறுத்தி சில ஆர்ப்பாட்டங்களின் ஓரங்கமாகவோ இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார். 'நாங்கள் இங்கே எங்கள் வாழ்வாதாரத்திற்காக போராடுகிறோம் ' என்று அவர் தனது இருசக்கர வாகனத்தை செயற்கைக் காலால் உந்தி –இயக்கினார் . மாகாணத்தில் உள்ள பலரைப் போலவே, அவர் போர்க்கால ஷெல் தாக்குதலில் கடுமையாக காயமடைந்திருந்தார்.

இந்து

**வனவிலங்கு பூங்காவிற்கான பரப்பளவை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தன்னிச்சையாக விரிவாக்கியதன் மூலம் வடபகுதி கிராமமான சுண்டிக்குளத்தில் வசிப்பவர்கள் பாரம்பரிய விவசாய நிலங்களை இழந்துள்ளனர்**



# நிறுவனங்களில் கடமையாற்றும் அதிகாரிகள் மக்கள் நலன்களை முன்னிறுத்தச் செயலாற்ற வேண்டும்

## -வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு-

அரசாங்க நிறுவனங்களில் கடமையாற்றும் அதிகாரிகள் மக்கள் நலன்களை முன்னிறுத்தச் செயலாற்ற வேண்டும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் யாராவது தவறு செய்திருந்தால் அவ்விடயங்களை எனக்கு எழுத்து மூலம் சமர்ப்பணம் செய்யுங்கள் இவ்விடயங்கள் மனிதாபிமானத்துடன் அதற்கான விடயங்களை விரைந்து முன்னிறுத்துவேன்.

அரசாங்க நிறுவனங்களில் தினமும் 8 மணிநேரம் கடமையாற்றும் அரச அலுவலர்கள் பொது மக்கள் மற்றும் அரச அலுவலர்களால் முன்னிலைப்படுத்தும் அனைத்து விடயங்களையும் மூன்று நாள்களுக்குள் பதில் அளிக்கவேண்டும்.

கடந்த கால கணக்காய்வு விடயங்கள் எதுவும் நிலுவையில் இல்லை. எனினும் ஆவணங்களை - பதிவுகளை அழிக்கும் முயற்சிகளை செய்யாமல் இருப்பது நல்லது 2021 இல் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ள நிதியை நாங்கள் குறைவாகப் பயன்படுத்தியுள்ளோம்.இது மக்கள் பார்வையில் மிக துரோகச் செயல் என்றார். (50)

விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 222 3735, 021 7388 307 021 222 4077
advtyarlthinakkural@gmail.com
ePaper → thinakkural.lk/yarl-thinakkural
No: 267, Navalar Road, Jaffna.

## வரலாற்றில் முதல்தடவையாக செங்கோலுடன் நடந்த யாழ்.மாநகரசபை அமர்வு



வரலாற்றில் முதல் தடவையாக யாழ்.மாநகர சபையின் அமர்வு நேற்று செங்கோலுடன் இடம்பெற்றது.

அண்மையில் இறைபதமடைந்த நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் 10 ஆவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் வேண்டுகோளுக்கு இணங்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய நிர்வாகம் அண்மையில் யாழ்.மாநகர சபைக்கு செங்கோலொன்றினைக் கையளித்திருந்தது.

இந்நிலையில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் 11 ஆவது நிர்வாக அதிகாரி குமரேஷ் சயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட செங்கோலுடன் வரலாற்றில் முதல் தடவையாக யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் நேற்றைய தினம் யாழ்.மாநகர சபை அமர்வு நடந்தேறியிருந்ததையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (18,40)

## பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தினால் கீழ்வரும் பாடசாலையின் பழைமை வாய்ந்த சேதமடைந்த விடுதிக்கட்டடத்தை இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி விடுதிக்கட்டடத்தை 01.12.2021 ஆம் திகதியிலிருந்து 14.12.2021 வரை நேரில் பார்வையிட்டு கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பகட்டணமாக ரூ.250.00ஐ அலுவலக நாட்களில் மு.ப.8.30 - பி.ப 03.00 மணிக்கு இடையில் எமது அலுவலக நிதிக் கிளையில் செலுத்தி கேள்விப்பத்திரத்தை எமது பாட சாலை வேலைகள் கிளையில் 14.12.2021 காலை10.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். அதனுடன் மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டினை கேள்வியுடன் இணைத்து 14.12.2021 ஆம் திகதி பி.ப. 2.30க்கு முன் சமர்ப்பதித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றைய தினம் உடனடியாக திறக்கப்படும். கேள்விகள் சமர்ப்பித்த யாவரும் தவறாது சமூகமளித்தல் வேண்டும்.

தகைமையுடைய கேள்விதாரருக்கான அனுமதி வழங்கப்பட்ட பின்னர் உரிய தொகையினை அலுவலகத்தில் செலுத்தி 07 நாட்களினுள் குறித்த வேலையை பாடசாலை செயற்பாட்டிற்கும், மாணவர்களிற்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையூறின்றி முடிவுறுத்தி பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

| பாடசாலையின் பெயர் | கட்டடத்தின் அளவு | மீளளிப்பு வைப்புத்தொகை |
|---|---|---|
| யா/இந்து மகளிர் கல்லூரி | சேதமடைந்த விடுதிக் கட்டடம் 180' x30' | 50,000.00 |

மு.இராதாகிருஸ்ணன் -தலைவர்
கேள்விச்சபை,
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்.

## பெறுகை அறிவித்தல்

### வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை - கரவெட்டி

### 2022ஆம் ஆண்டுக்கான சேவைகளுக்கான விலைமனுக் கோரல்

தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு அவர்களினால் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையில் 2022 ஆம் ஆண்டுக்கான பின்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறிமிடப்பட்ட பெறுகைமனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| இல | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|
| | | | கேள்விப் பிணைத்தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 01 | சுத்திகரிப்பு சேவை | 20 | 25000.00 | 2021.12.15 - 2022.03.01 |
| 02 | சாரதி சேவை | 03 | 25000.00 | 2021.12.15 - 2022.03.01 |
| 03 | பாதுகாப்புச்சேவை | பகல் - 05<br>இரவு - 07 | 25000.00 | 2021.12.15 - 2022.03.01 |

1) சுத்திகரிப்பு சேவை வழங்குநர் சுத்திகரிப்பு, சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன், குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியமைக்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

2) சாரதிசேவை வழங்குநர் சாரதிசேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன், குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியமைக்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

3) தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குநர் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்த தகுதிவாய்ந்த ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன், குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியமைக்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

4) தனியார் பாதுகாப்பு சேவை வழங்கும்போது, பகல் நேரம் என்பது முற்பகல் 06:00 மணியிலிருந்து பி.ப 06:00 மணியையும், இரவு என்பது நேரம் பி.ப 06:00 மணியிலிருந்து மு.ப 06:00 வரையான காலப் பகுதியையும் குறிக்கும்.

5) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

6) சேவை வழங்குநர்கள் மேற்படி சேவைகளுக்குரிய ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனியான பெறுகை ஆவணங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை கரவெட்டியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 2021.12.01 தொடக்கம் 2021.12.14ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ 2000.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7) பெறுகை ஆவணங்கள் 15.12.2021 ஆம் **திகதி** மு.ப 10.00 **மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி"** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் சேவையின் பெயரைக்குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

8) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

க.த.ஐங்கரன்
தலைவர்,
பெறுகைக்குழு,
வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

01.12.2021

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

### சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2022

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், என்பவற்றிற்கு 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2021.12.01 - 2021.12.08 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2021.12.08 பி.ப 2.00 மணி வரை
கேள்விதிறக்கும் திகதி :- 2021.12.08 பி.ப 2.30 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது **பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் 2021 டிசம்பர் 08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பிருந்து கேள்விப்பத்திரம் பெறும் போது ரூபா 200.000.00 க்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாக வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி / வைப்புச் சான்றிதழ். தானியங்கி இயந்திர அட்டை இருந்தால் அதனையும் சமர்ப்பித்தல் வேண்டும். தானியங்கி இயந்திரம் அட்டை இல்லையாயின் வங்கி முகாமையாளரால் உறுதிப்படுத்த வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வைப்புச் சான்றிதழ் கேள்விதிறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி / வைப்புச் சான்றிதழ். தானியங்கி இயந்திர அட்டை என்பன கேள்வித் தொகையின் 1/3 பகுதியை அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.
3. சங்கானை மரக்கறி, சந்தைக்கான மின்சாரக் கட்டணம் குத்தகைக்காலப்பகுதியில் குத்தகையாளரால் செலுத்தப்படல் வேண்டும்.
4. சங்கானை மரக்கறிச்சந்தை தவிர்ந்த ஏனைய சந்தைகள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் குத்தகைக்கு வழங்கப்படும்.
5. சங்கானை நவீன மீன் சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இச்சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் மீன் சந்தையின் மீன் வெட்டும் இடத்தினது தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பொதுசுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
7. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
8. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை.2021.12.15ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
11. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமூகமளிக்கலாம்.
12. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
13. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்.
14. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன் கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் (மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு (5'X 3') ரூபா 50.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 5.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
15. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் " என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிடமுடியாது.
16. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
17. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.
18. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
19. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### சந்தைகள், கோழியிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை - 2022

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை (வாகனப் பாதுகாப்பு நிலையம் தவிர்த்து) | ___ | 8,574,225.00 | 15,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 01 | 1,500.00 | 229,900.00 | 3,000.00 | 500.00 |
| 03 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 02 | 1,500.00 | 190,190.00 | 3,000.00 | 500.00 |
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சத்தியகாடு சந்தை | ___ | 1,321,925.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | தொல்புரம் மத்திய சந்தை | ___ | 27,835.00 | 500.00 | 250.00 |
| 03 | பொன்னாலை வாராந்தச் சந்தை | ___ | 4,321,075.00 | 500.00 | 250.00 |
| | **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | — | 166,259.50 | 3,000.00 | 750.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | — | 20,900.00 | 1,000.00 | 500.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 01 | 1,750.00 | 145,255.00 | 1,000.00 | 500.00 |
| 04 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 02 | 1,750.00 | 147,450.45 | 1,000.00 | 500.00 |
| | **அராலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அராலி, செட்டியார்மடம் சந்தை | ___ | 24,035.00 | 500.00 | 250.00 |

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
2021.12.01

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

### பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2022

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பல்லசுட்டி சந்தை 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | பல்லசுட்டி சந்தை | - | 32,450.00 | 1000.00 | 250.00 |

பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் அதனை நடாத்துவதற்குரிய இடத்தினை தற்போது சந்தை இயங்கும் இடத்திலிருந்து 500m சுற்றுவட்டத்தினுள் தாமே தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் தெரிவு செய்த இடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு பொதுச்சுகாதார பரிசோதகரின் சிபார்சுக்கு அமைவாகவே செயற்படவேண்டும். அத்துடன் தெரிவு செய்யும் இடத்திற்கான குத்தகை அல்லது வாடகை குத்தகையாளராலேயே கொடுக்கப்படவேண்டும்.

கேள்விப்படிவம் வழங்குதல், ஏற்றுக்கொள்ளுதல், திறக்கும் திகதி மற்றும் ஏனைய நிபந்தனைகள் மேற்கூறப்பட்ட மீள் கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவையே இதற்கும் பொருந்தும்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
2021.12.01

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைசபை,
சுழிபுரம்.

# படகு சேவையில் பயணிப்போருக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்கி வைப்பு



காரைநகர் - ஊர்காவற்றுறைக்கு இடையில் நடைபெறும் படகு சேவையில் பயணிப்போருக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பாதுகாப்பு அங்கிகளை வழங்கியுள்ளனர்.

காரைநகர் - ஊர்காவற்றுறைக்கு இடையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இலவசமாக பாதை சேவையினை நீண்ட காலமாக நடத்தி வருகின்றனர்.

குறித்த படகு சேவை ஊடாக உத்தியோகஸ்தர்கள் , ஊர்காவற்றுறை நீதிமன்றம் செல்வோர் , மாணவர்கள் என பல தரப்பினரும் சென்று வருகின்றனர்.

சுமார் 500 மீற்றர் தூரமான இந்த படகு சேவை நடைபெறாவிடின் , இரண்டு ஊர்களுக்கு இடையில் பயணிப்போர் யாழ்ப்பாணம் சென்றே , செல்லவேண்டும். அதற்காக அவர்கள் சுமார் 40 கிலோ மீற்றர் தூரம் சுற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

இரண்டு ஊர்களுக்கு இடையிலும் நிரந்தர பாலம் அமைக்கும் பணிகள் முன்னெடுப்பதற்கு சுமார் 1,700 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி இருந்த போதிலும் , பாலம் அமைப்பதற்கான பணிகள் எவையும் ஆரம்பிக்கப் படவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை , திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி களப்பில் சேவையில் ஈடுபட்டு வந்த பாதை கடந்த 23ஆம் திகதி விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்தவர்களில் பாடசாலை மாணவர்கள் ஐந்து பேர் உள்ளிட்ட ஏழு பேர் உயிரிழந்திருந்தனர். படகு பாதையில் பயணித்தவர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படாது , பாதுகாப்பு இன்றியே அவர்கள் பயணித்ததாலேயே விபத்தில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(40)


பால்நிலை வன்முறைக்கெதிரான
16 நாள் செயற்பாடு - 2021
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
“ பெண்களுக்கெதிரான அனைத்து விதமான வன்முறைகளும் மனித உரிமை மீறலாகும்.!.’
16 2021
யாழ் சமூக செயற்பாட்டு மையம்


## வல்வெட்டித்துறை நகரசபை பாதீடு மீண்டும் தோல்வி

வல்வெட்டித்துறை நகர சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு,செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் ஒரு வாக்கால் தோல்வி அடைந்தது.

கடந்த முறை நடைபெற்ற கூட்டத்தில் ஒரு வாக்கினால் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருந்தது. நகர சபை சட்ட திட்டங்களுக்கமைய இரண்டாவது தடவையாக நேற்று வரவு செலவுத் திட்டத்தை சபைத் தலைவர் செல்வேந்திரா சமர்ப்பித்து போது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வாக்களிப்பின் போது முன்னரைப் போல எதிராக ஒன்பது வாக்குகளும் ஆதரவாக எட்டு வாக்குகளும் கிடைத்தன. இதனால் ஒரு வாக்கினால் வரவு செலவுத் திட்டம் மீண்டும் தோல்வி அடைந்தது.

இதனையடுத்து சபைக்கு புதிய தலைவர், உப.தலைவர் தெரிவு செய்யப்படவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

ஆளுகையில் இருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் சுயேச்சைக் குழுப்பக்கம் சேர்ந்து கொண்டதால் சுயேச்சைக் குழு ஆட்சியை அமைத்திருந்தது.

சுயேச்சைக் குழு கொண்டு வந்த வரவு- செலவுத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதன் பக்கம் இருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர் எதிர்த்து வாக்களித்ததல் வரவு- செலவுத் திட்டம் தோல்வியடைந்தது. அதே போலவே நேற்றைய கூட்டத்திலும் இடம்பெற்று ஒரு வாக்கால் சுயேச்சைக் குழு தோல்வி அடைந்தது.

வாக்கெடுப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்களுமாக 9 பேர் ஒரு அணியாகவும், சுயேச்சைக் குழு 4 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பி. 2 உறுப்பினர்களும் ஈ.பி. ஆர். எல். எப் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலா ஒரு உறுப்பினர்களுமாக 8 பேர் ஒரு அணியாகவும் வாக்கெடுப்பில் கலந்துகொண்டனர். (44)

## இரத்ததான முகாம்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 18 வது இரத்தானமுகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 2 மணிவரை இளவாலை கலைமகள் படிப்பகம் (நாவலடிச் சந்தி அருகாமையில்) இடம்பெறவுள்ளது. தற்போது இரத்தவங்கிகளில் ஏற்பட்டிருக்கும் குருதிவகைகளுக்கான தட்டுப்பாட்டினை கருத்தில் கொண்டு இவ் இரத்தான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைவரையும் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்.

## வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தவிசாளர் சோ.சுகிர்தனால் நேற்று சபையில் முன்வைக்கப்பட்டது.

39 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் நேற்று கலந்துகொண்ட 29 உறுப்பினர்களும் வரவு-செலவு திட்டத்திற்கு தமது ஆதரவினை வழங்கியுள்ளனர்.

நேற்றைய சபை அமர்வில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 7 உறுப்பினர்களும், தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் தலா 2 உறுப்பினர்களும் கலந்துகொள்ளாத அதே வேளை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் புதிய உறுப்பினர் ஒருவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 17 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 8 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 6 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா 2 உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (40)

## மயங்கி விழுந்து சிறுமி உயிரிழப்பு

வலிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்ததாக கூறப்படும் சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவம் நாச்சிமார் கோவிலடி, இமையாணன், உடுப்பிட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று காலை இடம் பெற்ற இச் சம்பவத்தில் கோடிஸ்வரன் வினுஷ்கா (வயது- 17) என்ற சிறுமியே வலிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்தது உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.(44)

### -எமக்கு 400 மில்லியனைத் தாருங்கள்-

## இந்திய அரசிடம் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் கோரிக்கை

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா, செயலாளர், பொருளாளர் மற்றும் உப தலைவர் ஆகியோர் நேற்றைய தினம் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதுவரை, யாழ். இந்திய துணைத் தூதுவராலயத்தில் நேரில் சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளனத் தலைவர் அன்னராசா,

யாழ். மாவட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையினால் பாதிக்கப்படுகின்றார்கள்.

அத்துமீறிய சட்டவிரோத இந்திய மீனவர்களின் பாதிப்பு எங்களுடைய மீனவ பரம்பலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதோடு மீனவ சமூகத்தில், மீனவர்கள் கூலி தொழிலுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதோடு குடிப்பரம்பல் குறைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிராக பல போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும் தற்போதும் இந்திய மீனவர்களின் வருகை பருத்தித்துறை மற்றும் நெடுந்தீவு பிரதேசங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றன இந்த வருகையினை கட்டுப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகிறோம். அந்த வகையில் நேற்று யாழ். இந்தியத் துணைத் தூதரைச் சந்தித்து பேசி உள்ளோம்.

நாங்கள் பல கோடி ரூபாய் சொத்துகளை இழந்து இருக்கின்றோம். எங்களுடைய கடற்றொழில் அமைச்சு 500 கோடி ரூபாய்க்கு மேல் இந்திய அரசாங்கத்திடம் நஷ்ட ஈடு கோரியுள்ளது.

இருந்தபோதிலும் யாழ். மாவட்ட மீனவர்கள் கூட்டுறவு சங்கங்கள் சமாசங்கள், சம்மேளனங்களினை பொறுத்தவரை எங்களுக்கு குறிப்பிட்ட தொகையை அண்ணளவாக 400 மில்லியன் ரூபாவை எங்களுடைய கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்குமாறும் அதற்குரிய திட்டம் ஒன்றினை தயாரித்து கடந்த வாரம் கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்து கையளித்திருக்கின்றோம்.

எங்களுடைய மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை அதிகரிக்க இந்த 400 மில்லியன் ரூபா உதவியினை தொழிலாளர்களுக்கு மானியமாகவும் சுழற்சி முறையில் வழங்குமாறு கோரி நிற்கின்றோம்.

குறித்த கோரிக்கையினை தாம் பரிசீலிப்பதாக யாழ். இந்திய துணை தூதுவர் தெரிவித்தாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (75)

## பனிக்கன்குளம் வீடுகளை வீடற்றவர்களுக்கு வழங்குங்கள்



முல்லைத்தீவு -பனிக்கன்குளம் அரச உத்தியோகத்தர்களுக்கான வீட்டுத் திட்டம் சமூக விரோத செயற்பாடுகளின் இடமாக மாறி உள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் பனிக்கன்குளம் கிராமத்தில் 50 வீடுகள் அமைக்கப்பட்டன. இவ்வீடுகளில் அரச உத்தியோகத்தர்கள் குடியேறாததன் காரணமாக வீடுகளில் பாம்புப் புற்றுகள் வளர்ந்தும் பற்றைகள் மூடியும் காணப்படுகின்றன. இவ்வீடுகள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் பல தடவைகள் ஆராயப்பட்ட போதிலும் இறுதியான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

கடந்த ஆட்சியின் போது நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் பனிக்கன்குளம் அரச உத்தியோகத்தர்களுக்கான வீடுகளில் அரச உத்தியோகத்தர்கள் உடனடியாக குடியேற வேண்டும். இல்லை எனில் வடமாகாணத்தில் வீடற்ற குடும்பங்களுக்கு இவ்வீடுகளை வழங்குவதற்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கலாம் என்ற முடிவுகள் எடுக்கப் பட்டன. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பல குடும்பங்கள் பதிவு செய்த போதிலும் குறித்த வீடுகளை பதிவுகளை மேற்கொண்ட குடும்பங்களிடம் இதுவரை வழங்கவில்லை. ஆட்களற்ற பனிக்கன்குளம் அரச உத்தியோகத்தர் வீட்டுத் திட்டம் சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் சமூக சீர்கேடான விடயங்கள் இடம் பெற்று வருவதன் காரணமாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் இவ்வீட்டுத் திட்டத்தினை நேரடியாக பார்வையிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு குறித்த வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பனிக்கன்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (27)

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பொருட்கள் வழங்கிவைப்பு



வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் , செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் 2021ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பாடசாலைகள்,கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் புதியகுடியிருப்பு கிராம அபிவிருத்திச்சங்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான அலுவலக தளபாடங்களும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நிதி ஒதுக்கீட்டில் புதுக்குடியிருப்பு மேற்கு வேணாவில் முருகானந்தா வித்தியாலயத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாபெறுமதியான கதிரைகள் மற்றும் மோட்டர் நேற்று கையளிக்கப் பட்டது. குறித்த பொருட்களை பாராளுமன்ற உறுப்பினர்களின் இணைப்பாளர்களான முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உபதவிசாளர் க.ஜெனமேஜெயந் வழங்கிவைத்துள்ளார்கள். (15)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்- நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் மாலை 5மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் க.கைலவாசன் ஆறுமுகமான பொருள் என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

## மாவட்ட செயலகத்திற்கு தொற்று நீக்கி திரவங்கள் கையளிப்பு



கொழும்பு தெற்கு றோட்டறிக் கழகத்தினால் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட ஒரு தொகுதி தொற்று நீக்கி திரவங்களை அந்நிறுவனம் சார்பாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் நேற்று மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் ஆகியோரிடம் வழங்கிவைத்தார். (75)

## லிற்றோ நிறுவனம் விடுத்த அறிவிப்பு

எரிவாயு சம்பந்தமான சிக்கல்கள் இருக்குமாயின் 1311 என்ற அவசர இலக்கத்துக்கு அழைக்குமாறு லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளார்.

அண்மைய நாட்களாக எரிவாயு சிலிண்டர், அடுப்புகள் வெடிப்பு சம்பவங்கள் இடம்பெறும் நிலையில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாயாற்று பகுதியில் படகு கவிழ்ந்து விபத்து

முல்லைத்தீவு- நாயாற்று கடற்படை முகாமிற்கு சொந்தமான கரையோர சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபடும் படகு ஒன்று கரையோர பகுதியில் விபத்துக்குள்ளாகி நீரில் மூழ்கியுள்ளது.

செட்ரிக் எனப்படும் கரையோர சுற்றுக்கால் நடவடிக்கையில் ஈடுபடும் படகே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது. நேற்று நாயாற்று பகுதியில் அதிகளவான கடல் மழைவெள்ள நீர் பெருங்கடலுடன் கலப்பதால் நீர் ஓட்டம் அதிகமாக காணப்படுகின்றது களப்பு பகுதியில் இன்று இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது படகு விபத்துக்குள்ளாகிய தில் அதில் சென்ற கடற்படையினர் நீந்தி கரை சேர்ந்துள்ளார்கள். (15)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2022 ஆம் ஆண்டிற்கான 2வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2022.01.01ஆம் திகதி தொடக்கம் 2022.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | - 01.12..2021 - 07.12.2021 பிப 2.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி | - 08.12.2021 பிப 1.30 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | - 08.12..2021 பிப 2.00 மணிக்கு |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம். |

| தொ. இல | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,885,500.00 | |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 179,300.00 | 250.00 |
| 4 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 67,100.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 26,681,050.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 50,043.00 | |
| 3 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 209,000.00 | 250.00 |
| 4 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,126.00 | |
| 5 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 55,000.00 | |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 170,500.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2021.10.07 ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

**க.தர்சஷன்**
**தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

# கேள்வி அறிவித்தல்

## காரைநகர் பிரதேசசபை

## சபை நிதி 2021

01 காரைநகர் பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காகக் கோரப்படுகின்றன.

02. தேசியபோட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/செயலாளர். காரைநகர் பிரதேசசபை. (தொலைபேசி: 021 2251735, fax: 021 225 1735. மின்னஞ்சல்: karainagarps@gmail.com) இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2021.12.01ஆம் திகதியிலிருந்து 2021.12.15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. தேவையான தகைமைகள். கேள்விஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் தரவு அட்டவணை (SHEDULE) பகுதி 5 இல் தரப்பட்டுள்ளது.

05. கேள்வி பெறதகுதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடங்கள் அபிவிருத்திக்கான நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர் / செயலாளர். காரைநகர் பிரதேசசபை எனும் முகவரியில் **2021.12.01 ஆம் திகதியிலிருந்து 2021.12.15 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும்** இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 (VAT நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் தலைவர் / செயலாளர். காரைநகர் பிரதேசசபை எனும் முகவரிக்கு 2021.12.16 திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விப்பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

08. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 07.12.2021 ஆம் திகதி பி.ப. 14.00 மணிக்கு காரைநகர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக் கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் வந்து பங்குபற்றலாம்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தராதரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதி திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை: பிணை வைப்பு | வேண்டப்படும் கேள்விப்பிணை: செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| NP/14/41(08)/02/ Council/2021/03 | பாலாவோடையில் அந்தியெட்டி மடம் நிர்மாணித்தல் | 3.592 | 90 நாட்கள் | C8 & C7 (கட்டடம்) | 63 நாட்கள் | 36,000.00 | 17.03.2022 வரை |

தலைவர்.
பெறுகைக் குழு.
காரைநகர் பிரதேச சபை.
01.12.2021.

# மாந்தை கிழக்கு பெற்றோர் ஆளுநரிடம் முறைப்பாடு

முல்லைத்தீவு- மாந்தை கிழக்கு பாடசாலை மாணவர்கள் பாடசாலையில் இருந்து வீடு திரும்புவதற்கான பேருந்து சேவையினை நடாத்துவதற்கு வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாந்தை கிழக்கு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு ,பனங்காமம் சந்தியில் இருந்து பயணிக்கும் தனியார் பேருந்து பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், செல்வபுரம் பாடசாலை, பாலிநகர் மகா வித்தியாலயம், குமாரசாமி வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களை காலையில் ஏற்றிச் செல்லும்.

ஆனால் இப்பாடசாலையின் மாணவர்கள் பாடசாலை முடிந்தவுடன் வீடு திரும்புவதற்கான பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை. நண்பகல் 12.00 மணிக்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து ஒன்று பாண்டியன்குளத்திற்கு வருகை தருகின்றது. இப்பேருந்துக்கு போட்டியாக மல்லாவியில் இருந்து தனியார் பேருந்து ஒன்று நண்பகல் 12.30 மணியளவில் பயணித்து பனங்காமம் வரை பயணிக்கின்றது.

நண்பகல் 12.30 மணிக்கு மல்லாவியில் இருந்து பயணிக்கும் தனியார் பேருந்தினை பிற்பகல் 1.30 மணிக்கு பயணிக்கத் தொடங்கினால் காலையில் பாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்கள் பிற்பகலில் வீடு திரும்புவதற்கான வாய்ப்புகள் உருவாகும். இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து சங்கத் தலைவரிடம் கடந்த வாரம் கேட்ட போது மாணவர்கள் வீடு திரும்பக் கூடிய வகையில் பேருந்து சேவையினை நடத்துவோம் என மாந்தை கிழக்கு பெற்றோர்களுக்கு வாக்களித்தவர் தற்போது மாணவர்கள் வீடு திரும்புவதற்கான பேருந்து சேவை நடத்த முடியாது எனவும் மாணவர்கள் வவுனியாவில் இருந்து பிற்பகல் 2.30 மணிக்கு மாங்குளம் வரும் தனியார் பேருந்திலோ அல்லது பிற்பகல் 2.40 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து மாங்குளத்திற்கு வந்தடையும் தனியார் பேருந்திலோ மாணவர்கள் காத்திருந்து பயணிக்கலாம் என தெரிவிக்கின்றார்.

மாந்தை கிழக்கிற்கு மாணவர்கள் வீடு திரும்புவதற்கான பேருந்து சேவைகள் நடத்துவதற்கு பல்வேறு காரணங்கள் கூறி வருகின்றார். இந்நிலையில் வடமாகாண ஆளுநர் ஆகிய தாங்கள் மாந்தை கிழக்கு மாணவர்கள் பாடசாலை சென்று வீடு திரும்புவதற்கான பேருந்து வசதியினை ஏற்படுத்தித் தருமாறு வேண்டுகின்றோம். இவ்விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து சங்கத் தலைவர் ஆகியோரிடமும் ஏற்கனவே பேருந்து நெருக்கடி தொடர்பாக தெரிவித்துள்ளோம்.

தனியார் பேருந்து அல்லது இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து மாந்தை கிழக்கில் மாணவர்கள் பாடசாலை சென்று திரும்புவதற்கு பணியில் ஈடுபடுவது அவசியமாக உள்ளது எனவும் பெற்றோர்களாகிய நாம் தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். கொரோனா தொடங்குவதற்கு முன்னர் மாணவர்கள் வீடு திரும்புவதற்கான தனியார் பேருந்து சேவை மாந்தை கிழக்கில் இடம் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (27)

## உதயன் பிரதம ஆசிரியருக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

மூதறிஞர் மு.வரதராசன், பைந்தமிழ் வளர்த்த பரிதிமாற் கலைஞர் ஆகிய சான்றோர்களுக்கான நினைவரங்கம் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உதயன் முன்னாள் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சிவயோகன், கிராம அலுவலர் எ.செல்வரட்ணம் ஆகியோருக்கான அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. தமிழ் முறைப்படி ச.டிலானி, க.மு.சுப்பிரமணியம், க.ம.பத்மநாதன். க.கனகசிங்கம், வ.ஏழுமலைப்பிள்ளை, து.யோகேசுவரி ஆகியோருக்கான அகவை நாள் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன. (27)


## குளிரூட்டி விற்பனைக்கு

கோழி இறைச்சிக் கடைகளில் கோழி இறைச்சி காட்சிப்படுத்துவதற்குரிய 4 அடி நீளமான கண்ணாடி குளிரூட்டி விற்பனைக்கு உண்டு.

**T.P 0760270394**


# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-09 நடுத்தெரு ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல 31/10 என்னும் ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் சின்னையா கார்த்திகேசு என்னும் பெயரில் வரிமதிப்பீட்டு பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனம் அளவீடுசெய்யப்படுவதற்குமுன்னர் இருந்தநிலப்பரப்பு01 குளி 4 1/2விஸ்தீரணம்கொண்ட ஆதனத்திற்கு கதிரவேலு சின்னத்தம்பி பிரசித்த நொத்தாரிசு க.தில்லையம்பலம் முகதாவில் 1952.12.28ம் திகதி 249ம் இலக்கத்தில் நிறைவேற்றிய பிரிவிடுதல் உறுதி மூலம் சொந்தமும் உரித்துடையவரானார். குறித்த கதிரவேலு சின்னத்தம்பி காலஞ்செல்ல மேற்குறித்த சின்னத்தம்பி நடராசாவும் சின்னத்தம்பி செல்லத்துரையும் உரித்துள்ள வாரிசுகளானார்கள்.

சின்னத்தம்பி நடராசாவும் செல்லத்துரை யசிதாவும் செ.றதீஸ்குமாரும் நன்கொடையாக பிரசித்த நொத்தாரிசு வி.உருத்திரேஸ்வரன் முகதாவில் 4049ம் இலக்க 09.06.2012ம் திகதியிட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தை செல்லத்துரை கைம்பெண் சற்குணவதிக்கு வழங்கியுள்ளார்கள்.

குறித்த அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனம் எங்களில் 1ம் பேர்வழிக்காரர்களின் காலஞ்சென்ற பிதாவும்2ம்3ம்பேர்வழிக்காரர்களின் காலஞ்சென்றபிதாவின் பிதாவுமாகிய கதிரவேலுசின்னத்தம்பியின் பேரில் மனமொத்து 1952ம் ஆண்டு மார்கழி மாதம் 28ம் திகதி பிரிவிடல் செய்யப்பட்ட பிரிவிடல் உறுதி இல 249 இன் படி நிலபர 1 குளி 4 1/2 யும் கிடைக்கப்பெற்றது என்றும் கதிரவேலு சின்னத்தம்பியின் சகோதரர்கள் தமக்குவேறு ஆதனங்களை கதிரவேலு சின்னத்தம்பி நன்கொடையாய்கொடுத்தமையால்தமது சொரியல் பங்கையும் கதிரவேலு பொன்னம்பலம், கதிரவேலு சிவசம்பு கைம்பெண் பாறுபதியும் மனமொத்து தமது பங்கை கொடுத்தமையால் கதிரவேலு சின்னத்தம்பியே முழுப்பங்கையும் பூரணமாய் சுதந்திரமாய் எவரது தடையுமின்றி 50 வருடங்களுக்கு மேலாய் ஆட்சி செய்து வந்தார் என்றும் இவர்களது பின்னுரித்தாளர்கள் இந் நன்கொடையை ஏற்று சாட்சிக்காரர்களாய் தமது ஒப்பத்தை வைக்கின்றனர் என்றும் அடியுறுதியில் இதைப்பற்றி மாட்டறையப்பட்டுள்ளது என்றும் அடியுறுதியும் கூடக் கொடுக்கிறோம் என்றும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

செல்லத்துரை கைம்பெண் சற்குணவதி பிரசித்த நொத்தாரிசு ஆதித்தன் கார்த்திகா முகதாவில் 418ம் இலக்க 26.08.2014ம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை புவிராஜசிங்கம் வசந்தராஜாவுக்கு வழங்கியுள்ளார். புவிராஜ சிங்கம் வசந்தராஜாவும் விஜயகுமாரியும் பிரசித்த நொத்தாரிசு ச.சிவரூபன் முகதாவில் 5412ம் இலக்க 04.09.2016ம் திகதியில் அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை ஜேசுதாசன் றிச்சாட் றீகனும் மனைவி நளாயினிக்கும் வழங்கியுள்ளார்.

ஆதன இடாப்பு:- வடமாகாணம் யாழ் மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று அரியாலை இறை யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-09 நல்லூர் பிரதேச செயலர் பிரிவு கிராம அலுவலர் பகுதி J/95 "புங்கடி வளவு" நில பர 06 குளி 17 . அதில் நில அளவையாளர் ப.புஸ்பராஜா அவர்களால் அளந்து வரைந்த 3536ம் இலக்கப்படத்தில் துண்டு01 எனக் குறித்த படி நில பர 02 குளி 10.01 . இது மீண்டும் நில அளவையாளர் பி.தனராஜ் அவர்களால் 2016.06.20ம் திகதி 3644ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 1-4 எனக்காட்டப்பட்டபடி நில.பர 02 குளி 08.57 இதில் துண்டு 02 எனக் குறித்த ஆதனம் நிலப்பரப்பு 01ற்கும் எல்லை.

| | |
|---|---|
| கிழக்கு | :- கனகசபாபதி பெண் குகனேஸ்வரியின் ஆதனம். |
| வடக்கு | :- குறித்த படத்தில் துண்டு 01 எனக் குறித்த ஆதனம். |
| மேற்கு | :- 10 அடி அகலப்பாதை |
| தெற்கு | :- குறித்த படத்தில் துண்டு 04 எனக் குறித்த இதன் மிகுதி ஆதனம் இதுடங்கலும் அத்துடன் மேற்கு ஒழுங்கையில் பிரதான வீதிக்குச் செல்லும் பாதை பாவிப்புரித்தும். |

தற்போது ஜேசுதாசன் றிச்சாட்றீகன் நளாயினி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஜேசுதாசன் றிச்சாட்றீகன் நளாயினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்,**
**மாநகரசபை.**

# மே.இ.தீவுகள் அணி அசத்தல் 204 இற்குள் சுருண்டது இலங்கை



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை, முதல் இன்னிங்ஸில் 204 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்துள்ளது.

நேற்று முன்தினம் காலி மைதானத்தில் ஆரம்பமான போட்டியில் முதலாம் நாள் ஆட்டநேர முடிவின்போது ஒரு விக்கெட்டினை இழந்த நிலையில் 113 ஓட்டங்களை பெற்று நல்ல நிலையில் இருந்தது இலங்கை.

எனினும் நேற்றையதினம் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர்களின் சாமர்த்தியத்தினால் 61.3 ஓவர்களுக்கு மாத்திரம் தாக்கு பிடித்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளது.

இலங்கை அணி சார்பில் பத்தும் நிஸ்ஸான்க 73 ஓட்டங்களையும், அணித் தலைவர் திமுத் கருணாரத்ன 42 ஓட்டங்களையும் அதிகபடியாக எடுத்தனர்.

பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் சிறப்பாக பந்து வீசிய வீராசாமி பெருமாள் 5 விக்கெட்டுகளையும், ஜோமல் வாரிக்கன் 4 விக்கெட்டுகளையும் மற்றும ஹோல்டர் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். பின்னர் தனது முதல் இன்னிங்ஸுக்காக பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத்தீவுகள் 4 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 2 ஓட்டங்களை பெற்றுள்ளனர்.

- கால்பந்தாட்டப் போட்டியில்-

# அப்கன்ட்றி லயன்ஸ் அணி அசத்தலான வெற்றி

டிபெண்டர்ஸ் எவ்சிக்கு எதிராக கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற சுப்பர் லீக் கால்பந்தாட்டப் போட்டியில் காலித் அஸ்மில் வெளிப்படுத்திய அற்புத ஆற்றல்களின் உதவியுடன் 2 - 0 என்ற கோல்கள் அடிப்படையில் அப்கன்ட்றி லயன்ஸ் கழகம் வெற்றிபெற்றது.

அப்கன்ட்றி லயன்ஸ் கழகம் போட்ட இரண்டு கோல்களிலும் அஸ்மிலின் பங்களிப்பு இருந்தமை விசேட அம்சமாகும். ஒரு கோல் போடப்படுவதில் பங்காற்றிய அஸ்மில், மற்றைய கோலை அவராகவே போட்டார். இந்த இரண்டு அணிகளுக்கு இடையிலான போட்டி ஆரம்பித்ததும் டிபெண்டர்ஸ் எவ்சியின் ஆதிக்கம் வெளிப்பட்டது. அப்கன்ட்றி லயன்ஸ் கோல் எல்லையை டிபெண்டர்ஸ் எவ்சி ஆக்கிரமித்தபோதிலும் அப்கன்ட்றி லயன்ஸ் தலைவரும் கோல்காப்பாளருமான சுஜான் பெரேரா, எதிரணியின் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி தனது அணியைக் காப்பாற்றிய வண்ணம் இருந்தார்.

போட்டியின் 26 ஆவது நிமிடத்தில் டிபெண்டர்ஸ் எவ்சி எல்லையில் 25 யார் தூரத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ப்றீ கிக்கை காலித் அஸ்மில், பந்து வளைந்து செல்லும் வகையில் மிகவும் இலாவகமாக உதைத்தார். டிபெண்ட்டர்ஸ் கோலை நோக்கிச் சென்ற பந்தை அணித் தலைவரும் பின்கள வீரருமான ஜேசுராஜ் பேர்னார்ட் தலையால் முட்டி திசை திருப்ப முயற்சித்தார். ஆனால் அவரது துரதிருஷ்டம் பந்து அவரது சொந்த கோலினுள்ளேயே சென்றது.

இந்த இனாம் கோல் மூலம் உற்சாகம் அடைந்த அப்கன்ட்றி லயன்ஸ் வீரர்கள் எதிரணியின் கோல் எல்லையை தொடர்ச்சியாக ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனால் இடைவேளை வரை எந்த மேலதிக கோல் எதுவும் போடவில்லை.

இடைவெளையின் பின்னர் கோல் நிலையை சமப்படுத்த டிபெண்டர்ஸ் எவ்சி முயற்சித்ததுடன் அப்கன்ட்றி லயன்ஸ் கழகம் கோல் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சித்தது.

போட்டியில் 4 நிமிடங்கள் எஞ்சியிருந்தபோது வலது பக்கத்திலிருந்து கிடைத்த கோர்ணர் உதையை வளைந்து செல்லும் வகையில் அஸ்மில் இடதுகாலால் உதைக்க, அப்பந்து கோலினுள் புகுந்தது.

இதன் மூலம் 2 - 0 என்ற கோல் அடிப்படையில் அப்கன்ட்றி லயன்ஸ் மிகவும் அவசியமான வெற்றியை ஈட்டியது.

-ரி-10 கிரிக்கெட் போட்டி-

# பிலிப் சோல்டின் அதிரடியால் அபுதாபி சிறப்பான வெற்றி

ரி-10 தொடரின் 22ஆவது லீக் போட்டியில், அபுதாபி அணி 7 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது.

அபுதாபியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், அபுதாபி அணியும் சென்னை பிரேவ்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அபுதாபி அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை பிரேவ்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில், 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 107 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மொஹமட் செஷாத் 53 ஓட்டங்களையும் ரவி பொபாரா ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அபுதாபி அணியின் பந்துவீச்சில், லிவிங்ஸ்டன் 3 விக்கெட்டுகளையும் ஓவர்டொன், நவீன் உல் ஹக் மற்றும் பிரிக்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 108 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்னை பிரேவ்ஸ் அணி, ஏழு ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், அபுதாபி அணி 7 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பிலிப் சோல்ட் 63 ஓட்டங்களையும் கிறிஸ் கெய்ல் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சென்னை பிரேவ்ஸ் அணியின் பந்துவீச்சில், மார்க்டியால் 2 விக்கெட்டுகளையும் கர்டிஸ் கெம்பர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 20 பந்துகளில் 7 சிக்ஸர்கள் 4 பவுண்ரிகள் அடங்களாக 63 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட பிலிப் சோல்ட் தெரிவுசெய்யப்பட்டார்.






இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் குறித்து குற்றவியல் விசாரணையை முன்னெடுக்கவும்-சஜித்



நாடு முழுவதும் பதிவாகிக் கொண்டிருக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு குற்றவியல் விசாரணை நடத்தப்படவேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சில நாட்களாக சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வரும் நிலையில், நாளாந்தம் எரிவாயுவைப் பயன்படுத்தும் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்ற பல இடங்களைப் பட்டியலிட்ட அவர் , கடந்த 48 நாட்களில் 11 சம்பவங்கள் பதிவாகியுள்ள அதேவேளை, இந்தச் சம்பவங்கள் அசாதாரணமானவை எனவும் குறிப்பிட்டார்.அரசாங்கம் வீட்டு உபயோகத்திற்காக 18 லீற்றர் கலப்பின எரிவாயு சிலிண்டரை அறிமுகப்படுத்திய பின்னரே, குறித்த சம்பவங்கள் ஆரம்பமாகியுள்ளன. இது மக்களை ஏமாற்றி பாரிய இலாபத்தை ஈட்டும் அரசாங்கத்தின்

தந்திரம் என்றும் அவர் தெரிவித்தார். இதில் முக்கிய விடயம் வாயுக் கலவை மாற்றப்பட்டு எடை குறைக்கப்பட்டது எனவும், அடுத்த முக்கிய விடயம் இலங்கையின் காலநிலைக்கு அமைய எரிவாயு சிலிண்டர்களில் புரொப்பேன்

மற்றும் பியூட்டேன் வீதங்கள் பூர்த்தி செய்யப்படாமை எனவும் அவர் மேலும் தெரி வித்தார்.

# புத்தளத்தில் புகையிரத பாதையை மறித்துப் பொதுமக்கள் போராட்டம்



புத்தளம்-கடையாக்குளம் பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் தமக்கு ஏற்பட்டிக்கும் அசௌகரியங்களுக்கு தீர்வுகோரி பிரதேச மக்கள் கவனயீர்ப்பு போரா ட்டம் ஒன்றை நடத்தியிருக்கின்றனர்.

புத்தளம் - அனுராதபுரம் வீதியில் உள்ள புகையிரத பாதையை வழி மறித்து இந்த போ ராட்டத்தினை மக்கள் முன்னெடுத்திருக்கின்றனர். எனினும் நேற்று மதியம்வரை மக்களுடைய கோரிக்கை தொடர்பாக எவரும் கவனம் செலுத்தவில்லை.

இதனால் மக்கள் தொடர்ச்சியாக போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றனர்.

# இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் இருதய சிகிச்சை வளாகம் திறக்கப்படும்



இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் போதிய பௌதீக வசதிகள் இன்மையால் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், வைத்திய சாலையின் இருதய சிகிச்சை சேவைகளுக்குத் தேவையான வசதிகளுடன் கூடிய இருதய சிகிச்சை வளா கத்தை நிர்மாணிக்க சுகாதார அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. வடிவமைப்பு, கட்டுமான அடிப்படையில் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்துக்கு தொடர்புடைய ஒப்பந்தம் வழங் கப்படும். இரத்தினபுரி போதனா வைத்தியசாலையானது சப்ரகமுவ மாகாணத்தில் சுமார் 2 மில்லியன் மக்களுக்கு சேவையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டை மீள முடக்குவது தொடர்பில் எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை



நாட்டை மீள முடக்குவது தொடர்பாக எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. என அமைச்சரவை இணைப்பேச்சாளர், அமைச்சர் ரமேஸ் பத்திரண கூறியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தற்போது நாட்டில் கொரோனா தொற்றுக்கு இலக்கான நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

எனினும் நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது எதிர்காலத்திலும் நாடு முடக்கப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# 35ஆவது உலக இராணுவ விளையாட்டு போட்டிகளில் இலங்கை அணியிக்கு பயர்ப்ளே விருது கிடைத்தது




ஈரான் நாட்டின் தெஹ்ரான் நகரில் அண்மையில் இடம்பெற்ற உலக இராணுவ விளை யாட்டுப்போட்டிகளில் பங்குபற்றிய இலங்கை விமனப்படையைச் சேர்ந்த எயார் கொ மடோர் உதுல விஜேசிங்க தலைமையின் கீழ் பங்குபற்றிய இலங்கை அணியினர் உலக மல்யுத்த போட்டியில் பயர்ப்ளே விருதினை பெற்றுக்கொண்டனர்.இலங்கை இராணுவம்,கடற்படை மற்றும் இலங்கை விமானப்படை ஆகியவற்றைச் சேர்ந்த மல்யுத்த வீரர்களை கொண்டு அமையப்பெற்ற இந்த அணியானது போட்டிகளில் தீவிரமாகவும் நூதனமாகவும், சிறப்பாகவும் செயற்பட்டதன் காரணமாக இந்த விருதினை பெற்றுக் கொண்டனர்

இந்த அணி சார்பாக கோப்ரல் உதார பெர்னாண்டோ 61 கிலோ பிரிவிலும் சிரேஷ்ட வான் படை வீரர் லக்மால் விஜயசூரிய 74 கிலோ பிரிவிலும் , சிரேஷ்ட வான் படை வீரர் நிஷான் வல்பிட்டிய அவர்கள் 92 கிலோ பிரிவிலும் சிரேஷ்ட வான்படை வீரர் ருவன் கல்யாண 125 கிலோ பிரிவிலும் பங்குபற்றினர் இந்த குழுவின் முகாமையாளராக குரூப் கப்டன் ரந்திக குணவர்தன குழு பயிற்சியாளராகவும் உத்தியோகபூர்வமாக கலந்துகொண்டனர்.

# நாட்டில் ஒமிக்ரான் பரவல் தொடர்பில் உறுதியான அறிக்கை வெளியிட முடியாது-சுகாதார அமைச்சு



இலங்கையில் ஒமிக்ரான் கொரோனா பிறழ்வு பரவலாக காணப்பட்டால் அது தொடர் பான உறுதியான அறிக்கை வெளியிட முடியாது. என சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கின்றது. மரபணு வரிசைப்படுத்தல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக சுகாதார சேவை களின் பிரதிப் பணிப்பாளர் நாயகமான வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

வெளிநாட்டில் இருந்து வந்தவர்களின் மாதிரிகள் நேர்மறையாக இருப்பதைச் சோதித்து, மரபணு வரிசைப்படுத்தலுக்கு உட்பட்டு, அவர்களில் யாராவது ஒமிக்ரான் பிறழ்வை கொண்டிருக்கிறார்களா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.தனி நபர்கள் தடுப்பூசி போடப்படுவதை உறுதி செய்வதன் மூலம் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் கடுமையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

அண்மைக் காலங்களில் கொரோனா நோய் தொற்று கணிசமான அளவு அதிகரித்து வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுப் போக்குவரத்தில் சுகாதார வழிகாட்டல் மீறப்படும் சம்பவங்கள் மோசமாக அதிகரித்தது

**-பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை-**

பொதுப் போக்குவரத்து சேவைகளில் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மீறும் சம்பவங்கள் மோசமாக அதிகரித்துள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தின் தலைவர் உபுள் ரோஹண கூறியுள்ளார்.

அரச மற்றும் தனியார் பொது போக்குவரத்து சேவையில் அமர்ந்து பயணிப்பதை விட அதிக பயணிகள் நின்று கொண்டு பயணிக்கின்றனர். இந்த நடைமுறை தொடர்ந்தால், நாட்டில் மிக விரைவில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரிக்க ஓர் உறுதியான வாய்ப்பாக அமையும்.

எனவே, பயணிகளை உள்வாங்குதல் மற்றும் சுகாதார வழிகாட்டல்களை கண்டிப்பாக கடைபிடிக்குமாறு பயணிகள் போக்குவரத்து அமைப்பை அறிவுறுத்து வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அவர் வேண்டுகோள் விடு த்தார்.

இல்லையெனில், நாடு நிச்சயமாக மற்றுமொரு முடக்கலுக்கு செல்ல நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒமிக்ரான் கொரோனா பிறழ்வின் தன்மை, அதன் தீவிரம் குறித்து வைத்தியர். சந்திம ஜீவந்தர வெளியிட்ட தகவல்



ஒமிக்ரான் கொரோனா திரிவு வைரஸின் தன்மை மற்றும் அதன் தீவிரம் தொ டர்பிலான தகவல்களை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு உயிரியல் துறையின் தலைவரான வைத்தியர். சந்திம ஜீவந்தர புதிய தகவல்களை வெளியிட்டிருக்கின்றார்.

இது தொடர்பில் அவர் தனது ட்விட்டர் கணக்கில் தெரிவித்துள்ளதாவது, இந்த பிறழ்வு தொடர்பில் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டதாகவும் அவர் விவரித்துள்ளார். டெல்டா உட்பட ஏனைய வகைகளுடன் ஒப்பிடுகையில், ஒமிக்ரான் அதிகமாக பரவக்கூடியதா, ஒருவரிடமிருந்து மற்றுமொருவருக்கு எளிதில் பரவுகிறதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. என அவரது ட்வீட் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

புதிய பிறழ்வின் நோயின் தீவிரத் தன்மையை பொறுத்தவரை, டெல்டா உள்ளிட்ட பிற வகைகளுடன் ஒப்பிடும்போது ஒமிக்ரான் தொற்று மிகவும் கடுமையான நோயை ஏற்படுத்துமா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

புதிய பிறழ்வின் தாக்கம் தொடர்பில் கண்டறிய சோதனையின் செயற்திறனை அதிகரிக்க வேண்டும்.ஏனைய பிறழ்வுகளை கண்டறிவதற்காக பயன்படுத்தும் பீசிஆர் சோதனைகளின் ஊடாக ஒமிக்ரான் பிறழ்வினையும் கண்டறிய முடியும். விரைவான அன்டிஜென் கண்டறிதல் சோதனைகள் உட்பட பிற வகை சோதனைகளின் ஊடாக இதன் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

JAFFNA MEDICAL ASSOCIATION
ANNUAL GENERAL MEETING – 2022
NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association, will be held on Saturday, 29th January 2022 at 11.00 a.m. at the Nurses Training School Lecture Hall Teaching Hospital Jaffna, for the following purposes:

1. To receive and consider the annual report of the committee of management on the affairs of the association, the statement of accounts for the year ended on 31st of December 2021 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due notice has been given.
3. To elect the committee of management for year 2022.
4. To appoint the auditors of the association and to authorize the committee of management to determine their remuneration.

By order of the committee of management,

Honorary Secretary
1st December 2021

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 18 08 1969



ஆண்டவன் அடியில் 29 11 2021

அமரர் **செந்தூரன் யாதவகிருஷ்ணன்**

(பழைய மாணவன் - யாழ்ப்பாணக் கல்லூரி)

அராலி கிழக்கை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை தற்காலிக வதிவிடமாகவும் கொழும்பு தெஹிவளையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட செந்தூரன் யாதவகிஷ்ணன் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் துரைராஜா, பஞ்சலட்சுமி கிருஷ்ணன் (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதிகளின் அன்பு புதல்வனும் கிருஷ்ணவேணி, கிருஷ்ணஜயந்தி, கிருஷ்ணவல்லி, கிருஷ்ணஜோதி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிவசங்கர், ஜெயராஜசிங்கம், சிவக்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆரூரன், ஆதவன், மயூரி, இந்து, யதுகுலன், கோகுலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கவினின் பேரனுமாவர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2021) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் Borella Jeyaratna மலர்ச்சாலையில் இடம்பெறவுள்ளதை அறியத்தருகின்றோம்.

No.9B , 4/3, Peter's Lane,
Dehiwela.

தகவல் : குடும்பத்தினர்
0773116763

# வீடுகளில் சிகிச்சை பெற்றுவரும் கொவிட் தொற்றாளர் எண்ணிக்கை திடீர் அதிகரிப்பு




வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வரும் கொவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கை யில், சுகாதார ஆலோசனைக்கு அமைவாக வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படும் கொவிட் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக சுகாதார பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த வாரத்திலும் பார்க்க இந்த வாரத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித் திருப்பதாக விசேட வைத்தியர் திருமதி. மல்காந்தி கல்ஹென தெரிவித்துள்ளார்.

# எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பதை அரசாங்கம் வேடிக்கை பார்க்கின்றது எதிர்க்கட்சிகள் சீற்றம்



நாட்டில் எரிவாயு கலப்பை மாற்றியதால் வீடுகளில் வெடிப்பு சம்பவங்கள் நடக்கும் நிலையேற்பட்டிருக்கின்றது. வீடுகளுக்குள் உள்ள எரிவாயு சிலிண்டர்களை நீக்கவே ண்டும். என இந்த செயற்பாடு கொலைக்குற்றமாகும்.

நாளைய தினமும் வீடுகளில் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கலாம். எனவே அரசாங்கம் இதனை வேடிக்கை பார்க்காது துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் வலியுறுத்தினர்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை, வரவு செலவு திட்ட விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தற்போது நாட்டில் அச்சத்தை ஏற்படு த்தியுள்ள எரிவாயு சிலிண்டர் வெடிப்பு குறித்த அச்சுறுத்தலை சுட்டிக்காட்டினர்.

இது குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் கயந்த கருணாதிலக எம்.பி கூறுகையில், எரிவாயு சிலிண்டர் வெடிப்பு என்பது பாரதூரமான ஒன்றாகும். ஆகவே மக்களை தெ ளிவுபடுத்தும் வேலைத்திட்டதை முன்னெடுக்க வேண்டும்.

நேற்றும் (ஞாயிற்றுகிழமை) இரண்டு எரிவாயு சிலிண்டர்கள் வெடித்துள்ளன. இந்த விட யத்தில் காலத்தை கடத்த வேண்டாம், உடனடியாக தெரிவுக்குழு ஒன்றினை அமைத்து இந்த அச்சத்தில் இருந்து மக்களை விடுவிக்க நடவடிக்கை

எடுக்க வேண்டும் என்றார். சபையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுகுமார் எம்.பி கூறுகையில், எரிவாயு சிலிண்டர் வெடிப்பு தொடர்பில் ஆய்வறிக்கை ஒன்றினை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் சபைப்படுத்துவதாக கூறினார். ஆனால் தற்போதுவரை குறித்த அறிக்கை சபைப்படு த்தப்படவில்லை. ஹட்டன் நகரில் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவமொன்று ஏற்பட்டுள்ளது. உண்மையிலேயே இந்த எரிவாயு சிலிண்டர்களை பாவிக்க முடியுமா கூடாதா என அரசாங்கத்தில் பொறுப்பான எவரேனும் ஒருவர் மக்களுக்கு கூறுங்கள். அரசாங்கம் இந்த உண்மைத் தன்மையை ஏன் மறைக்கின்றது என கேள்வி எழுப்பி னார். விவாதத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார கூறுகையில், எரிவாயு கலப்பை மாற்றிய காரணத்தினால் இன்று வீட்டுக்குள் குண்டுகள் வெடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வீடுகளில் உள்ளவர்களின் நிலைமை மிகவும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. எரிவாயு கலப்பு குறித்த ஆய்வு அறிக்கையை சபைப்படுத்துங்கள்.

அதுமட்டுமல்ல சட்டவிரோதமாக இவ்வாறான செயற்பாட்டை மேற்கொண்ட நபர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.

வீடுகளுக்கு வழங்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை உடனடியாக நீக்க வேண்டும். இந்த செயற்பாடு கொலைக்குற்றமாகும். நாளைய தினமும் வீடுகளில் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கலாம்.

எனவே அரசாங்கம் இதனை வேடிக்கை பார்த்துக்கொ ண்டு இருக்கப்போகின்றதா. அரசாங்கம் மக்களை முட்டாளாக்கப் பார்த்ததன் விளைவுகள் தான் இவை அனை த்துமே என்றார்.

## இலங்கைக்கு வருகைதந்துள்ள ஐ.நா விசேட அறிக்கையாளர் பல்வேறு தரப்புடன் பேச்சு




இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு கடந்த வியாழக்கிழமை வருகைதந்திருக்கும் ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா நான்கு தினங்களில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், தொழிற்சங்கப்பிரதிநிதிகள், பெருந்தோட்டத்தொழிலாளர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் உள் ளிட்ட பல்வேறு தரப்பினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா, எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதிவரையான 9 நாட்க ளுக்கு நாட்டில் தங்கியிருப்பார்.

இந்நிலையில் முதலாவது நாளான கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் கிளை அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். மேலும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தினங்களான கடந்த 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் கண்டிக்கு விஜயம் மேற்கொண்ட ரொமோயா ஒபொகாடா, அங்கு பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டதுடன் பெருந் தோட்டத்தொழிலாளர்களுடனும் சந்திப்புக்களை நிகழ்த்தியுள்ளார். அதுமாத்திரமன்றி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களைச் சந்தித்த அவர், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் மற்றும் தொழிலாளர் உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். அதேவேளை நான்காவது நாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை இலங்கை மற்றும் மாலைதீவிற்கான குடிப்பெயர்வு தொடர்பான சர்வதேச அமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்த ஐ.நா விசேட அறிக்கையாளர் ரொமொயா ஒபொகாடா, இலங்கை யில் இடம்பெற்றுவரும் ஆட்கடத்தல் சம்பவங்கள் மற்றும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியு ள்ளார்.

# கோரிக்கைகளுக்கு இவ்வாரம் தீர்வில்லையேல் 9ஆம் திகதி அரச சேவைகள் ஸ்தம்பிதமடையும்

### -அரசாங்க உத்தியோகபூர்வ சேவை தொழிற்சங்க கூட்டமைப்பு-



2022ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் ஊடாக 16 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட 4 பிரதான கோரிக்கைகளுக்கு இந்த வாரத்திற்குள் உறுதியான தீர்வை அரசா ங்கம் வழங்காவிட்டால் 9ஆம் திகதி முழு அரச சேவைகளும் ஸ்தம்பிக்கும்.

அரச சேவையாளர்களை புறக்கணித்து 10ஆம் திகதி வரவு-செலவு திட்டம் நிறைவே றினால் பணிப்புறக்கணிப்பு போராட்டம் நடக்கும் என இலங்கை அரசாங்க உத்தி யோகபூர்வ சேவை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் பி.எ.பி.பஸ்நாயக்க கூறினார்.

சகல அரச சேவையாளர்களும் நேற்றுமுன்தினம் நாடு தழுவிய ரீதியில் அரச நிறு வனங்கள், திணைக்களங்கள் முன்பாக பகல் உணவு இடைவேளையின் போது எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டார்கள்.

அப்போராட்டம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் அரச சேவையாளர்கள் புறக்கணிக்கப்பட்டதன் பிரதிபலனை அரசாங்கம் இனிவரும் தேர்தல்களில் நன்கு விளங்கிக் கொள்ளும். வாழ்க்கை செலவு உயர்விற்கேற்ப அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் தொடக்கம் 16 ஆயிரம் வரை அதிகரிக்க வேண்டும். 16 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு பிரதான கோரிக்கையாக காணப்படுகிறது. அரச ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதெ ல்லையை 65 ஆக அதிகரித்துள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது. ஓய்வூதியம் பெறுநர்களின் ஓய்வூதிய கொடுப்பனவுகளை அக்ரகார காப்புறுதிக்கு தன்னிச்சையாக அறவிடும் பிரச்சினை காணப்படும் பட்சத்தில் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடித்துள்ளமை முறைக்கேடானதாகும். ஆகவே, அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை 65 என்ற தீர்மானத்தை அரசாங்கம் நீக்கிக் கொள்ள வேண்டும். அரச ஊழியர்கள் நாட்டுக்கு சுமை என நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ குறிப்பிட்ட கருத்து வன்மையாக கண்டிக்கத்தக்கது. அரசியல் இலாபத்திற்காக அவர்களது ஆட்சி காலத்தில் தான் அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.அரச சேவையாளர்களின் சேவை நாட்டுக்கு இன்றியமையாதது. ஆகவே அரச சேவையாளர்களை அவமதிக்கும் வகையில் குறிப்பிட்ட கருத்தை அவர் மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும். அரச ஊழியர்களின் பேச்சு சுதந்திரத்தை முடக்கும் வகையில் பொதுநிர்வாக சேவை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை மீளப் பெற வேண்டும்.ஆகிய நான்கு பிரதான கோரிக்கைகளை கடந்த 13ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முன்வைத்தோம். முன்வைக்கப்பட்ட கோரிக்கை களுக்கு இது வரையில் எவ்வித பதிலும் ஜனாதிபதியிடமிருந்தும், அரசாங்க தரப்பினரிடமிருந்தும் கிடைக்கப் பெறவில்லை.

அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டை கண்டித்து நேற்றைய தினம் நாடு தழு விய ரீதியில் போராட்டத்தில் ஈடுப்பட்டோம். இவ்வாரத்திற்குள் தீர்வு கிடைக்காவிடின் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை முழு அரச சேவையில் ஸ்தம்பிதமடையும் ஒரு நாள் பணிபுறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம். 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் மீதான மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்காவிடின் தொடர் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுவோம்.அப்போராட்டம் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்றார்.

### ஆடைத் தொழிற்சாலையின் கழிப்பறையில் சிசுவின் சடலம், 23 வயது பெண் கைது



புடலுஓய - நியங்கந்தர பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் மலசலகூடத்தில் சிசு ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைத்த தகவலின் பிரகாரம் ஆடைத்தொழிற் சாலையின் பின்புறம் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே

சிசுவின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் 23 வயதுடைய யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்த நபரின் பணப்பையை திருடிய குரங்கு

பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்த நபர் ஒருவரின் பணப்பையை குரங்கு ஒன்று எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பகமுன பொலிஸ் நிலையத்திற்கு வந்தபோது குறித்த நபர் இந்த சம்பவத்தை எதிர்கொண்டுள்ளார்.

குறித்த நபரின் பணப்பையை காணவில்லை எனவும் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிப்படுகின்றது. பகமுன நகரை அண்மித்த பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

## ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் நிந்தவூர் பகுதியில் கைது

சம்மாந்துறை - நிந்தவூர் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வை த்திருந்த பெண் உட்பட 3 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நிந்தவூர் தியேட்டர் வீதிக்கு அருகில் வைத்து பெண் உட்பட மூவர் 80 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்றுமுன்தினம் (29) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதான மூவரும் நிந்தவூர் பகுதியை சேர்ந்தவர்கள் என்பதுடன் சுமார் 51,27,18 வயதுள்ள சந்தேக நபர்களாவர். அரச புலனாய்வுப் பிரிவினரின் த கவலுக்கமைய சம்மாந்துறை பொலிஸார் குறித்த மூவரையும் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கைதாகிய சந்தேக நபர்கள் மற்றும் சான்று பொருட்கள் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றதுடன் கைது செய்யப்பட்ட நபர்களை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த ப்படவுள்ளனர்.

## எரிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சீலாமுனை பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து எரிகாயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சீலாமுனை,ஆனந்தன் வீதியிலிருந்து வீட்டில் தனிமையிலிருந்த தி.சத்தியராஜன் என்னும் 69 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மண்ணெண்ணை ஊற்றப்பட்டு தீயிட்டு குறித்த நபர் எரிந்துள்ளதாக ஆரம்பக்கப்பட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபருக்கு அருகில் கடிதம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் அவர் தற்கொலை செய்துகொண்டாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ இடத் திற்கு வருகைதந்த மாவட்ட குற்றத்தடவியல் பிரிவு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர். அத்துடன் களுவாஞ்சிகுடி பிரதே ச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் பிரேதத்தை பார்வையிட்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்து, பிரேதத்தை மட்டக்களப்பு போ தனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாரிடம் உத்தரவிட்டுள்ளார்.

## நடக்க முடியாத முதியவர் ஒருவர் தனக்குதானே தீயிட்டு தற்கொலை



மட்டக்களப்பு - அமிர்தகழி பகுதியில் முதியவர் ஒருவர் தற்கொலை செய்து கொண் ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார். குறித்த சம்பவம் நேற்று (30) காலையில் இடம் பெற்றுள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர், அமிர்தகழி ஆனந்தன் வீதியைச் சேர்ந்த 69 வயதுடைய தியாகராஜா பத்திராஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளர். குறித்த நபர் நடக்க முடியாத நிலையில் தனிமையில் வாழ்ந்து வருவதாகவும் தனக்கு வாழ்கை வெறுத்து போயுள்ளது. என கடிதம் ஒன்றை எழுதிவைத்து விட்டு சம்பவதினமான நேற்றுக் காலை 9 மணி யளவில் சமையலறை பகுதியில் தனக்கு தானே மண்எண்ணெயை ஊற்றி தீயிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ள அவரின் சடலம் பிரோத பரிசோதனைக்காக மட்டு.போதனா வை த்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காற்று மாசு தொடர்பில் சுற்றாடல் அமைச்சர் விடுத்துள்ள பணிப்புரை



மக்கள் தொகை அதிகமான நகர்களில் காற்று மாசுபாட்டை குறைப்பதற்கான யோச னைகள் மற்றும் முன்மொழிவுகளை வழங்குமாறு சுற்றாடல் அமைச்சர் சுற்றுச்சூழல் சபைக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கின்றார். சுற்றாடல் அமைச்சின் புதிய தேசிய சுற்றாடல் சபையின் 14வது அமர்வு நேற்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்

புதிதாக தெரிவு செய்யப்பட்ட வனஸ்பதி உறுவாரிகே வன்னியலெத்தோ உட்பட சுற்றாடல் சபையின் 25 உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். நகர்ப்புறங்களில் ஏற்படும் காற்று மாசுபாடு குறித்து கருத்து தெரிவித்த சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, மக்கள் செறிந்து வாழும் நகர்ப்புறங்களில் காற்று மாசுபாட்டை குறைப்பதற்கான யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு சுற்றாடல் சபைக்கு பணிப்புரை விடுத்தார்.

# நீதிமன்றில் மேன்முறையீடு செய்து வேதா இல்லம் மீட்கப்படும்

## -எடப்பாடி உறுதியளிப்பு-



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வசித்து வந்த வேதா இல்லத்தை நினைவு இல்லமாக மாற்றியது செல்லாதென அறிவித்த சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, மேல்முறையீடு செய்யப்படுமென, முன்னாள் முதலமைச்சரும் அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்ந்த வேதா இல்லத்தை பொதுமக்கள் பார்வையிட வேண்டுமென்ற நோக்கத்தில்தான், அதை நினைவு இல்லமாக மாற்றியதாக அவர் தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இல்லம் போயஸ் கார்டன் என்றால் முதலில் ஞாபகம் வருவது முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தான். அடுத்தது அவர் வாழ்ந்த வேதா இல்லம். அதற்குக் காரணம் தான் சினிமாவில் நடிக்க ஆரம்பித்தது முதல் அரசியல் வாழ்க்கை வரை 44 ஆண்டுகாலம் அங்கே ஜெயலலிதா வாழ்ந்து மறைந்தார்.

இது ஜெயலலிதாவின் இல்லம் என்பதை விடவும், அ.தி.மு.க.வின் தலைமைக் கழகம் என்றே சொல்லலாம். அதற்குக் காரணம் அ.தி.மு.க. தொடர்பான முக்கிய முடிவுகள் அனைத்தும் இங்குதான் எடுக்கப்படும். ஜெயலலிதாவுடன் நட்பு ஏற்பட்ட பின்னர், 25 ஆண்டுகளுக்கு மேலாக சசிகலா இந்த வீட்டில்தான் வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில், வேதா நிலையம், நினைவு இல்லமாக மாற்றப்படுமென 2017ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் பழனிச்சாமி அறிவித்தார்.பின்னர் வேதா நிலையத்தை நினைவு இல்லமாக அறிவித்து, அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான அவசரச் சட்டத்தை தமிழக அரசு பிறப்பித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து ஜெயலலிதாவின் அண்ணன் மகளான தீபா, அவருடைய சகோதரர் தீபக் ஆகியோர் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த நீதிமன்றம் நினைவு இல்லத்தை திறப்பதற்கு தடை விதிக்க முடியாதெனத் தெரிவித்திருந்தது. இதையடுத்து, அரசுடமையாக்கப்பட்ட வேதா நிலையத்தை அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்.


இந்நிலையில், தனிநபர் சொத்துக்களைக் கையகப்படுத்துவது தொடர்பாக சட்டமியற்றுவதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை என்றும், வேதா நிலையத்தை நினைவில்லமாக மாற்றுவதற்குத் தடை விதிக்க வேண்டுமெனவும், தீபா, தீபக் ஆகியோர் வாதிட்டனர்.

இருதரப்பு வாதங்களைக் கேட்ட சென்னை உயர் நீதிமன்றம், ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வேதா நிலையத்தை அரசுடைமையாக்கியது செல்லாது.

நிலம் கையகப்படுத்தியது தொடர்பாக, அரசு எடுத்த நடவடிக்கைகள் எதுவும் செல்லாதெனவும், வேதா நிலையத்தை அரசுடைமையாக தமிழக அரசு பிறப்பித்த சட்டத்தை இரத்துச் செய்வதாக, நவம்பர் 24ஆம் திகதி தீர்ப்பளித்தது.

மேலும், ஜெயலலிதாவிற்கு எதற்காக 2 நினைவிடங்கள் என்றும் கேள்வி எழுப்பியிருந்தது. இந்த நிலையில், இந்த தீர்ப்பை எதிர்த்து நிச்சயம் மேல்முறையீடு செய்வோமெனத் தெரிவித்த எடப்பாடி பழனிசாமி, வேதா இல்லம் நிச்சயம் மீட்டெடுக்கப்படுமென உறுதியளித்தார்.

## இந்தியாவிற்குள்ளும் நுழைந்தது ஒமிக்ரான் தொற்று



இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு வருகை தந்த 4 வெளிநாட்டவர்களுக்கு ஒமிக்ரான் தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் கண்டறியப்பட்ட மிகவும் பரவக்கூடிய மாறுபட்ட கொரோனாவான ஒமிக்ரான் குறித்த கவலைகளுக்கு மத்தியில், மதுராவிற்கு வந்த 2 பெண்கள் உள்ளிட்ட 4 வெளிநாட்டுப் பயணிகளுக்கு நடத்தப்பட்ட சோதனையில், அவர்களுக்கு ஒமிக்ரான் பாதிப்பிருப்பது, கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த நான்கு பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். குறித்த நால்வரும் சுற்றி வந்த பகுதிகளிலுள்ள பொதுமக்களுக்கு, கோவிட் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 14 மாநிலங்ளிலுள்ள 30 சதவீதமான பெண்களின் அதிர்ச்சியளிக்கும் கருத்து

இந்தியாவில் 14 மாநிலங்களைச் சேர்ந்த 30 சதவீதத்திற்கும் மேலான பெண்கள், மனைவியை கணவர் அடிப்பது சரியேயென, அதிர்ச்சியளிக்கும் வகையிலான கருத்தை தெரிவித்துள்ளனர்.

நாட்டின் 18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தேசிய குடும்ப சுகாதார ஆய்வு சமீபத்தில் நடந்தது. இதில், 14 மாநிலங்களைச் சேர்ந்த 30 சதவீதம் பெண்கள், வீடுகளில் கணவர் மனைவியை அடிப்பது சரியே எனவும், கூறியுள்ளனர். அது தொடர்பில் வெளியாகியுள்ள தகவலின்படி, தெலுங்கானாவில் 84 சதவீதம் பெண்கள், கணவர் மனைவியை அடிப்பது சரி என்கின்றனர். ஆந்திராவில் 84வீதம் கர்நாடகாவில் 77 சதவீதம் பேர் இதே கருத்தை முன்வைக்கின்றனர். மணிப்பூரில் 66 வீதமும், கேரளாவில் 55, ஜம்மு - காஷ்மீரில் 49, மஹாராஷ்டிராவில் 44, மேற்கு வங்கத்தில் 42 சதவீதம் பெண்களும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளனர். இமாச்சல் பிரதேசத்தில், 14.8 சதவீதம் பேர் மட்டும் இது சரியெனக் கருத்து வெளியிட்டுள்ளனர்.இதன்படி 14 மாநிலங்களைச் சேர்ந்த 30 வீதமான பெண்கள், மனைவியை கணவர் அடிப்பது நியாயமே எனப் பதிலளித்துள்ளனர். தனக்குத் துரோகம் செய்வதாக சந்தேகிப்பது, மாமியாரை மதிக்காதது, தெரியாமல் வெளியே செல்வது, குழந்தைகள் மற்றும் வீட்டைப் பராமரிக்காதது மற்றும் நல்ல உணவு தயார் செய்யாதது உள்ளிட்டவை, மனைவியை கணவர் அடிப்பதற்கான முக்கிய காரணங்களாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.வீடு, குழந்தைகளை கவனிக்காதது மற்றும் மாமியாரை அவமானப்படுத்துவதே பெரும்பாலானோரின் கருத்துக்களாக இருந்தன. இதே கேள்விக்கு கர்நாடகாவைச் சேர்ந்த 81.9 சதவீதமான ஆண்கள், மனைவியை அடிப்பது சரியெனக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## அந்தமான் கடலில் புதிய தாழமுக்கம் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

தெற்கு அந்தமான் கடற்பகுதியில் புதியதோர் தாழமுக்கம் உருவாகியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.தெற்கு அந்தமான் கடற்பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது. இது அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுப்பெறுவதற்கு வாய்ப்புள்ளதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இந்த ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி மேற்கு, வடமேற்குத் திசையில் நகர்ந்து புயலாக வலுப்பெற வாய்ப்புள்ளது. இதனைத் தொடர்ந்து மத்திய வங்கக் கடல் பகுதியை நோக்கி நகர்ந்து வடக்கு ஆந்திரா, தெற்கு ஒடிசா இடையே கரையைக் கடப்பதற்கு வாய்ப்புள்ளதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.எனவே, மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிப்பதற்குச் செல்ல வேண்டாமென, வானிலை ஆய்வு மையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மதத்தை காரணம் காட்டி தடுப்பூசி செலுத்த மறுக்கும் ஆசிரியர்கள்



கேரளாவில், 5 ஆயிரம் ஆசிரியர்கள் மதத்தைக் காரணம் காட்டி, கொரோனா தடுப்பூசி போட மறுத்து வருவது, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கேரளா முழுவதும் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ஆசிரியர்களும், 20 ஆயிரம் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும், கல்வித்துறையில் பணியாற்றி வருகிறார்கள்.

கொரோனாவை ஒழிப்பதற்கு தடுப்பூசி ஒன்றே வழியென, மத்திய, மாநில அரசுகள் தீவிரமாகச் செயற்பட்டு வரும் நிலையில், கேரளாவில் 5 ஆயிரம் ஆசிரியர்கள் மதத்தைக் காரணம் காட்டி கொரோனா தடுப்பூசி போட மறுத்து வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து மாநிலக் கல்வித்துறை அமைச்சர் தெரிவிக்கும் போது 'தடுப்பூசி போட மறுக்கும் ஆசிரியர்களினால், மாணவர்களின் நலன்கள் பாதிக்கப்படும். சில ஆசிரியர்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாமல், பாடசாலைக்கு வருகிறார்கள். இதனை நாங்கள் ஊக்குவிக்கவில்லை.

இதனால், 47 இலட்சம் மாணவர்கள், மக்களின் நலன் கேள்விக்குறியாகியுள்ளது. இலட்சக்கணக்கானவர்கள் தடுப்பூசி போட்டு வரும் நிலையில், மதத்தைக் காரணம் காட்டி, தடுப்பூசி போடுவதற்கு ஆசிரியர்கள் சிலர் மறுப்பது ஏற்கமறுப்பது, நல்லதல்ல எனவும் தெரிவித்தார்.

## சொத்துக்காக தகராறு செய்த மகன் அதிரடியாக முடிவெடுத்த தந்தை



உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ராவில் சொத்துக் கேட்டு தொல்லை கொடுத்த மகனுக்கு பதிலடியாக, தந்தை செய்த செயல் அந்தப் பகுதியில், பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ராவில் உள்ள பிபல்மண்டி நிரலாபாத் பகுதியைச் சேர்ந்தவர் 83 வயதான கணேஷ் சங்கர் பாண்டே, புகையிலை வியாபாரம் செய்து வருகிறார். அந்தப் பகுதியில் சுமார் ரூ.2.5 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகள் உள்ளன. இவரின் மூத்த மகன் திக் விஜய், சொத்தில் ஒரு பகுதியை தனக்கு எழுதித் தருமாறு அவரிடம் கேட்டு வந்தார். இதனால், இருவருக்கும் பிரச்சினை ஏற்பட்டது.

இந்நிலையில் திடீரென தனது கோடிக்கணக்கான சொத்துகள் முழுவதையும், ஆக்ரா நீதிபதியின் பெயருக்கு எழுதி வைத்துள்ளார்.

இது குறித்து கணேஷ் சங்கர் பாண்டே கூறும்போது, எனது மூத்த மகன், மருமகள், பேரக்குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறார். தொடர்ந்து என்னிடம் சொத்துகளைக் கேட்டு வந்தார். அவர் என்னை மதிப்பதில்லையென்பதுடன், என் வார்த்தைகளைக் கேட்பதில்லை. தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தமையினால், ஆக்ரா மாவட்ட நீதிபதியின் பெயரில், எனது சொத்துகளை எழுதி வைத்து விட்டேன்.

எனது மரணத்திற்குப் பின்னர் அரசு இதைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமென, அவர் கூறியுள்ளார். சொந்த மகனின் பிரச்சினைக்காக, சொத்துகளை நீதிபதியின் பெயருக்கு எழுதி வைத்திருப்பது, அந்தப் பகுதியில், பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியப் பெருங்கடலில் மூன்று நாடுகள் இணைந்து போர் ஒத்திகை



போர் ஒத்திகைப் பயிற்சி, மாலைதீவில் முன்தினம் நிறைவடைந்தது.

இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்த கடற்படையினர், தென் அரபிக் கடல் பிரதேசத்தில் கடந்த இரண்டு நாட்களாக போர் ஒத்திகையில் ஈடுபட்டனர். மூன்று நாடுகளைச் சேர்ந்த அதிநவீன கப்பல்களும், ஹெலிகாப்டர்களும் கப்பலில் இருந்து இயக்கப்படும் போர் விமானங்களும், போர் ஒத்திகையில் பயன்படுத்தப்பட்டன.

இதேவேளை, இந்த நாடுகளுக்கு இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்துதல், 3 நாடுகளின் கடலோரக் காவல்படைகளுக்கு இடையில் ஒத்துழைப்பை உருவாக்குதல், போன்றவையே, இந்தப் பயிற்சியின் நோக்கமென,மாலைத்தீவிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. அந்தவகையில், நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இந்தப்















# புதிய குடியரசு நாடானது பார்படோஸ்



பிரித்தானிய மகாராணி எலிசபெத்தை அரச தலைவர் பதவியிலிருந்து, பார்படோஸ் நீக்கியுள்ளது. இதன் மூலம் அதன் முதலாவது ஜனாதிபதியுடன் ஒரு புதிய குடியரசை கரிபியன் தீவான பார்படோஸ் உருவாக்கியுள்ளது. கரீபியன் தீவுக்கு முதல் ஆங்கிலக் கப்பல்கள் வந்து, ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்குப் பின்னர், அதன் இறுதி எஞ்சிய காலனித்துவ பிணைப்புகளை பார்படோஸ் துண்டித்துள்ளது.

தலைநகர் பிரிட்ஜ்டவுனில் உள்ள சேம்பர்லைன் பாலத்தில், நூற்றுக்கணக்கான மக்களின் ஆரவாரத்துடன், செவ்வாய் நள்ளிரவு புதிய குடியரசு பிறந்தது.

கூட்ட நெரிசலான ஹீரோஸ் சதுக்கத்தில், பார்படோஸ் நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்பட்டபோது, 21 துப்பாக்கி தோட்டாக்கள் சுடப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.

பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் ஜமைக்கா உள்ளிட்ட 15 பிற நாடுகளுக்கும், இன்னும் ராணியாக இருக்கும் இரண்டாம் எலிசபெத்தின், காலனித்துவ வரலாற்றினை முறித்துக் கொண்ட இறுதி நாடாக, பார்படோஸ் மாற்றமடைந்துள்ளது.

பார்பேடியன் நடனம் மற்றும் இசையின் திகைப்பூட்டும் காட்சிக்குப் பின்னர், காலனித்துவத்தின் முடிவைக் கொண்டாடும் உரைகளுடன், அந்நாட்டின் முதல் ஜனாதிபதியாக சாண்ட்ரா மேசன் பதவியேற்றார்.

## ஓமிக்மிரான் வைரசுக்கு எதிராக, ஸ்புட்னிக்-வி சிறப்பாகச் செயற்படும்

### -ரஷ்யாவின் சுகாதாரத் துறை நம்பிக்கை-



ஓமிக்மிரான் வைரஸ்க்கு எதிராக, ஸ்புட்னிக் தடுப்பூசி நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குமென, ரஷ்யாவின் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

50 பிறழ்வுகளைக் கொண்டுள்ள உருமாறிய கொரோனா வைரசான 'ஓமிக்ரான்' தென் ஆபிரிக்காவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ், இதுவரை கண்டறியப்பட்டுள்ள கொரோனா வைரஸ்களில் ஆபத்தானதாக கூறப்படுகின்றது. இருப்பினும், இந்த வைரஸ் தென் ஆபிரிக்காவில் தோன்றி, பெல்ஜியம், இஸ்ரேல், ஹாங்கொங் உட்பட பல நாடுகளுக்கு ஏற்கெனவே பரவிவிட்டது.

புதிதாகப் பரவி வரும் வீரிய கொரோனா ரகமான ஓமிக்ரான், ஏற்கெனவே கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டவர்களை, குறிவைத்து தாக்குகின்றது எனும் தகவல், வெளியாகியுள்ளது.

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட ஓமிக்ரான், ஒரே வாரத்தில் உலகின் பெரும்பாலான நாடுகளில் பரவியுள்ளது. அதிக எண்ணிக்கையிலான பிறழ்வுகள், முந்தைய வகைகளை விட வேகமான பரவல், தற்போதைய தடுப்பூசிக்கு அடங்காததென, வெளியாகி வரும் பல தகவல்கள், ஓமிக்ரான் மீதான கவலையை அதிகரித்துள்ளன.

இந்த நிலையில், ஸ்புட்னிக் வி மற்றும் ஸ்புட்னிக் லைட் தடுப்பூசிகள் ஓமிக்ரான் கொரோனா வகைக்கு எதிராக நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குமென, ரஷ்யாவின் சுகாதாரத்துறை நம்பிக்கை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள ரஷ்ய சுகாதாரத்துறை, ஸ்புட்னிக் வி மற்றும் ஸ்புட்னிக் லைட் தடுப்பூசிகள் ஓமிக்ரான் கொரோனா வகை வைரஸை அழிக்கும் தன்மை கொண்டதென, நம்பிக்கை தெரிவித்துள்ளது.

மேலும், கொரோனா வகை வைரஸில், எத்தகைய திரிபுகள் ஏற்பட்டாலும், அவற்றை எதிர்கொள்ளும் திறன் வாய்ந்தவை ஸ்புட்னிக் தடுப்பூசி என்றும், தேவைப்பட்டால் இலட்சக்கணக்கான பூஸ்டர் தடுப்பூசிகளைத் தயாரிக்கவிருப்பதாகவும், ரஷ்யா தெரிவித்துள்ளது.ஓமிக்ரானுக்கான தடுப்பூசியை 45 நாட்களில் பெருமளவில் தயார் செய்ய முடியும். ஸ்புட்னிக் வி மற்றும் ஸ்புட்னிக் லைட் ஏனைய பிறழ்வுகளுக்கு எதிராக, மிக உயர்ந்த செயல்திறனைக் கொண்டிருப்பதனால், ஓமிக்ரானைத் தடுக்குமென,ரஷ்யாவின், கமலேயா நிறுவனம் நம்புகின்றது.

பெப்ரவரி 20, 2022ற்குள் பல ஸ்புட்னிக் ஓமிக்மிரான் பூஸ்டர்களை வழங்குவதாகக் கூறியுள்ளார். உலகிலேயே முதன்முதலில் மக்கள் பயன்பாட்டுக்கு வந்த கொரோனா தடுப்பூசி, ரஷ்யாவின் ஸ்புட்னிக்-வி ஆகும். கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முதல் ரஷ்யாவில், இந்தத் தடுப்பூசி பொதுமக்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றது.

ஸ்புட்னிக் வி தடுப்பூசியும், இரண்டு டோஸ்கள் கொண்டது. வலுவிழந்த வைரஸை உடலுக்குள் செலுத்தி, அதன் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்கும் தொழில்நுட்பமே, இதிலும் பயன்படுத்தப்படுகின்றது.

## சுவீடன் பிரதமராக மீண்டும் மெக்தலினா ஆன்டர்சன் பதவியேற்பு



சுவீடன் நாட்டின் பிரதமர் ஸ்டீபன் லேப்வென் அண்மையில் பதவி விலகியதை தொடர்ந்து, கடந்த 24ஆம் திகதி அந்த நாட்டின் புதிய பிரதமராக சோசலிச ஜனநாயக கட்சியின் மூத்த தலைவரான மெக்தலினா ஆன்டர்சன் நாடாளுமன்றத்தினால், தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதன் மூலம் நாட்டின் முதல் பெண் பிரதமர் எனும் பெருமையைப் பெற்றார். ஆனால் துரதிஷ்டவசமாக பிரதமராகத் தேர்வு செய்யப்பட்ட சில மணி நேரத்திலேயே அவர் பதவி விலகும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார்.

கூட்டணி ஆட்சியை அமைப்பதற்கு, அவரது கட்சிக்கு வழங்கிய ஆதரவை கிரீன்ஸ் கட்சி திடீரென திரும்பப்பெற்றது. அந்த நாட்டின் அரசியல் சாசன நடைமுறைப்படி கூட்டணிக் கட்சிகள் ஆதரவை விலக்கிக் கொண்டால் அரசாங்கம் பதவி விலகித்தான் ஆக வேண்டிய சூழலில், பிரதமர் மெக்தலினா பதவி விலகினார்.

இந்த நிலையில், நாட்டின் புதிய பிரதமரைத் தேர்வு செய்வதற்காக நாடாளுமன்றம் நேற்றுக் கூடியது. அப்போது நடந்த வாக்கெடுப்பில் பெருவாரியான எம்.பிக்கள் மெக்தலினாவை பிரதமராகத் தேர்வு செய்வதற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர்.

இதைத் தொடர்ந்து, அவர் மீண்டும் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டார். அவர் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவின்றி சிறுபான்மை அரசாங்கத்தை அமைப்பாரெனத் தெரிகின்றது. அவரது தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றது.

## டுவிட்டர் நிறுவனத்தின் புதிய தலைமை அதிகாரியாக இந்தியர் நியமனம்



கோடிக்கணக்கான பயனாளிகளைக் கொண்டுள்ள டுவிட்டர் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக பதவி வகித்த ஜேக் டோர்சி, தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில், டுவிட்டர் தலைமை பொறுப்பில் இருந்து ஜேக் டோர்சி பதவி விலக உள்ளதாகவும், டோர்சி மற்றும் டுவிட்டர் நிர்வாகக்குழு அடுத்த தலைமை அதிகாரி குறித்து முடிவு செய்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், இந்தத் தகவல் குறித்து, டுவிட்டர் தரப்பில் அதிகாரபூர்வ தகவல் வெளியிடப்படவில்லை. ஜேக் டோர்சி, தனது டுவிட்டர் பக்கத்தில், 'நான் டுவிட்டரை விரும்புகிறேன்' எனப் பதிவிட்டிருந்தார். இந்நிலையில், டுவிட்டர் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து தான் விலகுவதாக ஜேக் டோர்சி நேற்று அறிவித்துள்ளார். இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில், விரிவான கடிதத்தையும், பதிவு செய்துள்ளார்.

அவருக்கு பின்னர், பராக் அக்ரவால், தலைமைப் பொறுப்பை ஏற்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது. டோர்சியின் இராஜினாமா குறித்த தகவல் வெளியான பின்னர், பங்குச்சந்தையில் டுவிட்டர் பங்குகள் 11 சதவீதம் வரையில் உயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தற்போது புதிய தலைமை அதிகாரியாக இந்தியரான பராக் அகர்வால்(Barak Agarwal)நியமனம் செய்யப்பட்டுள்ளதாக டுவிட்டர் நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இவர் மும்பை ஐ.ஐ.டி.யில் கல்வி கற்றவர் என்பதுடன், 10 ஆண்டுகளாக டுவிட்டர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகின்றார். அவர் படிப்படியாக பதவி உயர்வு பெற்று, தற்போது இந்நிலைக்கு உயர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

தன்மேல் நம்பிக்கை வைத்து, டுவிட்டரின் புதிய தலைமை செயல் அதிகாரியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு நன்றி தெரிவித்து, அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். நிறுவனத்தை மென்மேலும் உயர்த்துவதற்குப் பாடுபடுவேன் எனவும், அவர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே, கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளாக இந்தியர்கள் பதவி வகித்து வரும் நிலையில், டுவிட்டரும் தமது நிறுவனத்திற்கு இந்தியரையே தேர்ந்தெடுத்துள்ளமை, உலகம் முழுவதும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

## ஓமிக்ரான் அச்சுறுத்தலினால் வெளிநாட்டுப் பயணிகளுக்குத் தடை விதித்தது ஜப்பான்

ஜப்பானில் ஒமிக்ரான் வைரஸ் பரவாமல் தடுப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது. உலகம் முழுவதும் ஓமிக்ரான் உருமாறிய வைரஸ் பொது மக்களை மிரட்டி வருகின்றது.

இதையடுத்து, பல உலக நாடுகள் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கி யுள்ளன. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு, தென் ஆபிரிக்கா உட்பட 8 நாடுகளிலிருந்து ஜப்பானுக்கு வருகை தரும் பயணிகள் 10 நாட்கள் தனிமையில் இருக்குமாறு, அறிவுறுத்தப்பட்டது. இந்த நிலையில், நாளை முதல் ஜப்பானுக்குள் நுழைய வெளிநாட்டுப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையுத்தரவு, செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வருமென, பிரதமர் புமியே கிஷிடா தெரிவித்துள்ளார்.

## கொரோனா அலைக்கு மத்தியில் ஜேர்மனியில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்



ஜெர்மனியில் கொரோனா 4-ஆவது அலைக்கு மத்தியில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் தொடங்கியுள்ளது.

உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் டிசம்பர் மாதம் 25-ஆம் திகதி கொண்டாடப்பட்டவிருக்கின்றது. ஆனால், தற்போதிலிருந்தே பல நாடுகளில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்கான ஆரவாரம் தொடங்கி விட்டது.

அந்த வகையில் ஜெர்மனியில் கொரோனா 4ஆவது அலை தீவிரமடைந்துள்ள நிலையில், பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், அங்கு கிறிஸ்மஸ் கொண்டாட்டம் கோலாகலமாகத் தொடங்கியுள்ளது. ஜெர்மனியின் தலைநகர் பெர்லினில் கோலாகலமாக கிறிஸ்மஸ் நிகழ்ச்சி தொடங்கியது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு, கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு, கிறிஸ்மஸ் தாத்தாக்கள் பரிசளித்து மகிழ்ந்தனர்.

## 7 பேருக்கு எமனாக மாறிய ஆமைக்கறி விருந்து தன்சானியாவில் நடந்த சோகம்



மடகாஸ்கரைத் தொடர்ந்து, தன்சானியாவின் ஜான்சிபார் தீவுகளில் ஆமைக் கறியை சமைத்து உண்டதனால் குழந்தை உட்பட 7 பேர் பலியான சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆமைக் கறி சாப்பிட்டதனால், உயிரிழந்தவர்களுக்கு ஜான்சிபார் தீவுகளின் ஜனாதிபதி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கடலோர நாடுகளில் வசிக்கும் மக்கள் ஆமை கறி சாப்பிடுவது இயல்பானது. கடல் பயணம் மேற்கொள்ளக் கூடியவர்கள் தவிர்க்க இயலாத சூழலில் ஆமைக் கறியை சாப்பிட நேரிடுவதும் உண்டு. மடகாஸ்கர், தான்சானியா போன்ற நாடுகளில் நாம் கோழி, ஆடு வெட்டி விருந்து வைப்பது போல, ஆமைக் கறி விருந்து வைக்கும் நடைமுறை உண்டு. தான்சானியாவின் ஜான்சிபார் தீவுகளில் உள்ள பெம்பா என்ற பகுதியில் கடந்த வியாழக்கிழமையன்று ஒரு வீட்டில் ஆமைக் கறி விருந்து பரிமாறப்பட்டிருக்கின்றது.இந்த விருந்திற்கு அடுத்த நாள் ஆமை கறி சாப்பிட்டவர்களில் 3 வயதுக் குழந்தை முதலில் உயிரிழந்தது.

அதே நாள் இரவில் மேலும் 2 பேர் உயிரிழந்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மேலும் 4 பேர் மரணமடைந்தனர். இதனையடுத்து, ஆமைக் கறி விருந்தில் பங்கேற்ற 38 பேர், மருத்துவமனையில், உடனடியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. இது தொடர்பாக தன்சானியா மருத்துவர்கள் தெரிவிக்கும் போது, குழந்தைகள் மற்றும் முதியவர்களின் உடலில் ஆமைக் கறியானது, விஷத்தன்மையை ஏற்படுத்தியிருப்பது தான் காரணம்.

அதேநேரத்தில் திடகாத்திரமான உடல் வலிமை கொண்ட இளைஞர்களுக்கு, ஆமைக் கறி பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இருப்பினும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மடகாஸ்கரில் கடந்த மார்ச் மாதம் இதேபோல் ஆமைக் கறி விருந்து நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது.

அதில், ஆமைக் கறி சாப்பிட்ட 19 பேர் உயிரிழந்தனர். ஆமைக் கறி சாப்பிட்டவர்கள் உயிரிழக்க நேரிடுவது குறித்து, மருத்துவ வல்லுநர்கள் மேலதிக ஆய்வுகளை செய்து வருகின்றனர்.

## குழந்தைகள் விளையாடும் பூங்காவில் சடலமாக மீட்கப்பட்ட 16 வயதுச் சிறுமி



பிரித்தானியாவிலுள்ள பூங்கா ஒன்றில் குழந்தைகள் பனியில் விளையாடிக் கொண்டிருந்த போது, சிறுமியின் சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்காட்லாந்தின் Hamilton பகுதியிலுள்ள Cadzow Glen பூங்காவில், ஞாயிற்றுக்கிழமை காலை, குழந்தைகள் பனியில் விளையாடிக் கொண்டிருந்தபோது, சிறுமியொருவரின் ஒரு சடலம் கண்டெடுக்கப்பட்டது. பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், அப்பகுதியில் சோதனை நடத்திய போது, அந்தச் சடலம், கடந்த வெள்ளிக்கிழமை காணாமல் போன ²Amber Gibson எனும் 16 வயதுச் சிறுமியின் சடலம் என்பதைப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், மேலதிக தகவல்களுக்காக பொலிஸார் மற்றும் துப்பறியும் ஆய்வாளர்கள் தொடர்ந்து சோதனைகளை நடத்தி வருகின்றனர். இதற்காக காட்சோ தெரு மற்றும் பூங்காவில் பொது மக்களுக்கு தடை விதித்துள்ளனர். அப்பகுதியில், தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெறுகின்றன. இந்நிலையில், 16 வயதுச் சிறுமியின் மரணம் குறித்து மேலதிக தகவல்கள் வெளிவரலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஸ்கொட்லாந்தில் மேலும் 03 ஓமிக்ரான் கொரோனா நோயாளிகள் அடையாளம்




ஸ்கொட்லாந்தில் ஒமிக்ரான் கொரோனா மாறுபாட்டின் மேலும் மூன்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து, பிரித்தானியாவில் அடையாளம் காணப்பட்ட ஓமிக்ரான் தொற்று நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

இப்போது லனார்சுயர் பகுதியில் ஐந்து நோயாளிகளும் என்ஹெச்எஸ் கிரேட்டர் கிளாஸ்கோ மற்றும் க்ளைடில் நான்கு நோயாளிகளும் உள்ளதாக ஸ்கொட்லாந்தின் சுகாதாரச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் ரக்பி சர்வதேச போட்டி கடந்த 13 ஆம் திகதி ஸ்கொட்லாந்தின் எடின்பரோவின் முர்ரேஃபீல்ட் மைதானத்தில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.